கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

187

மார்கழி 2022

ஆளுமைச்சிறப்பிதழ்

# ஜீவநதி

100/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்
வசந்தி தயாபரன்
தாட்சாயணி
இ.சு.முரளிதரன்
பேராசிரியர் செ. யோகராசா
பிரசாந்தி ஜெயபாலசேகரம்
அஸ்வினி வையந்தி
எஸ்.ரஞ்சிதா
வேல் நந்தகுமார்
தாமரைச்செல்வி
விஜிதா
ச.முருகானந்தன்
மேகலா ரஞ்சனி
த.அஜந்தகுமார்
சிந்துஜா திருச்செல்வம்



ச.முருகானந்தன்
சிறப்பிதழ்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2022 - ஐப்பசி - ஆளுமைச்சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**அமரத்துவமுடைய இலக்கியங்களாகக் கொண்டாடத்தக்க மருத்துவர் ச.முருகானந்தனின் போர்க்காலக்கதைகள்**
புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்.... 03

**போருடன் நீளும் எழுத்து எழுத்தாளர் ச.முருகானந்தனின் இரு தொகுதிகளை முன்னிறுத்திய பார்வை**
வசந்தி தயாபரன்.............................. 05

**காலத்தின் சாட்சியமாகும் ச.முருகானந்தன் கதைகள்**
தாட்சாயணி..................................... 08

**வித்தியாசமாக பொழியும் “கோடைமழை”**
பேராசிரியர் செ.யோகராசா.................. 14

**சமூகத்தின் மீதான விமர்சனமாக வெளிப்படும் “இனி வானம் வசப்படும்” சிறுகதைத் தொகுதி**
எஸ். ரஞ்சிதா.................................... 16

**பெண்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் அவலங்களினூடே சமூக அவலத்தை எடுத்தியம்பும் “நாம் பிறந்த மண்” சிறுகதைத் தொகுப்பு**
ஜெயபிரசாந்தி ஜெயபாலசேகரம்......... 19


**“நாளை நமதே” கட்டுரைத்தொகுதி பற்றிய கண்ணோட்டம்**
சிந்துஜா திருச்செல்வம் ................... 22

**அவர்கள் துணிந்து விட்டார்கள் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள் பற்றிய பார்வை**
அஷ்வினி வையந்தி ..................... 23

**ச. முருகானந்தனின் பணிகள்**
விஜிதா........................................ 25

**வன்னி மண்ணின் வாழ்வைச் சொல்லும் வலிமை மிக்க படைப்பாளி**
தாமரைச்செல்வி............................. 27

**ச.முருகானந்தனின் “மீன்குஞ்சுகள்”**
இ.சு.முரளிதரன்.............................. 29



## சிறுகதை

ச.முருகானந்தன் - 11



**ச.முருகானந்தனின் கவிதை முகம் “துளிர்த்தெழும் புதுச் செடிகள்” குறித்த ஒரு பார்வை**
புலோலியூர் வேல்.நந்தகுமார்......... 31

**ச.முருகானந்தனின் “நீ நடந்த பாதையில்...”**
மேகலா ரஞ்சித்............................. 33

**செயல் இதுவே மகத்தான மாமந்திரம்!**
டொமினிக் ஜீவா............................. 35

# ஜீவநதி

**2022 மார்கழி இதழ் - 187**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



**ஜீவநதி**

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-



## தொடர்ச்சியான படைப்புகளால் இலக்கிய உலகில் நிலைத்து நிற்பவர் ச.முருகானந்தன்

ச.முருகானந்தன் அவர்கள் வைத்தியராக இருந்த போதிலும் எழுத ஆரம்பித்த காலம் முதல் தொடர்ச்சியாக எழுத்துலகில் இயங்கி வருபவர். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், குறுநாவல்கள், நாவல்கள், மருத்துவக் கட்டுரைகள் என ஈழத்து இலக்கிய உலகில் தொடர்ச்சியாக இயங்கி வருபவர். பல்வேறு புனைபெயர்களில் எழுதி வருபவர். வன்னியில் வாழ்ந்த காலத்தில் வன்னி மக்களின் வாழ்வை தன் படைப்புகள் வாயிலாக சிறப்பாக வெளிக் கொண்டு வந்தவர். இவரது படைப்புகளில் மண்வாசனை தூக்கலாக இருக்கும். வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வாசகர்களது உள்ளம் நிறைந்த எழுத்தாளராக நீண்ட காலமாக விளங்கி வருகின்றார். மல்லிகை, ஜீவநதி, ஞானம் போன்ற இதழ்களில் பல படைப்புகளைப் படைத்துள்ளார். தேசிய சாகித்திய விருது, வடமாகாண விருது, கலாபூஷணம் விருது உட்பட பல்வேறு விருதுகளை பெற்றுக் கொண்டுள்ளார். 30 இற்கும் மேற்பட்ட சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களை வென்றுள்ளார். நாளேடுகளில் மருத்துவ விழிப்புணர்வு கட்டுரைகளை பல ஆண்டுகளாக தொடர்சியாக எழுதி வந்துள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் மருத்துவ விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றார். அனைவருடனும் மிக அன்பாகக் கதைக்கும் இயல்பை உடைய ச. முருகானந்தனின் சிறுகதைகளே அவருக்கு அதிக புகழைப் பெற்றுக் கொடுத்தன. கல்வி அமைச்சின் வாழ்நாள் சாதனையாளர் விருதையும் பெற்றுக் கொண்டுள்ள இவரை கௌரவித்து இவரது படைப்புகளை ஆவணப்படுத்தும் நோக்கோடு இவ்விதழ் வெளியாகின்றது. இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மேலும் பல படைப்புகளை ச. முருகானந்தன் அவர்கள் தர வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்



# அமரத்துவமுடைய இலக்கியங்களாகக் கொண்டாடத்தக்க மருத்துவர் ச.முருகானந்தனின் போர்க்காலக்கதைகள்

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

நாற்பத்தொரு ஆண்டுகள் நிறைவுற்றுவிட்டன. ச.முருகானந்தனது எழுத்துக்களுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது நேற்றுப் போலிக்கிறது. ஆளுக்காள் அறிந்திராத ஒரு நிலையில் வெறுமனே பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்திருந்த ஆக்கங்களே எமது அந்நியோன்னியத்திற்கான அடித்தளத்தினை அமைக்க அன்று வழிவகுத்திருந்தன எனலாம். அநீதிகளையும், அடக்குமுறைகளையும், பிற்போக்கு வாதங்களையும் கண்டு சீற்றம் கொள்ளும் அவரது சுபாவமும், அத்தகு சீற்றத்தினூடே தனது கருத்துக்கள், கொள்கைகளைத் துணிச்சலுடன் வெளிப்படுத்தும் அவரது பண்பும், பாத்திரங்களைப் படைப்பதில் சுய பிரக்ஞையுடன் சுதந்திரமாகக் செயற்படும் அவரது தனித்துவமும் வெகுவாகவே என்னை ஆகர்ஸித்திருந்தன. அன்றாடம் எம் மண்ணில் நிகழ்பவைகளையே பெரும்பாலும் முருகானந்தன் தனது படைப்புலகமாகக் கொண்டிருந்தார். சாதியம், சீதனப் பிரச்சினை, வர்க்கமுரண்கள் போன்றனவே அவரது பாடுபொருட்களாக அக்கால கட்டங்களில் விளங்கியதெனலாம்.

காலப்போக்கில் குறிப்பாகத் தொண்ணூறுகளில் முருகானந்தனது சிறுகதைகளில் பெருமாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஈழச்சிறுகதைகளில் பொதுவாகவே ஏற்பட்டு வந்த மாற்றம் ச.முருகானந்தனது கதைகளிலும் வர ஆரம்பித்தது. இந்த மாற்றமானது அவர் தன் தொழிலின் நிமிர்த்தம் வாழ்ந்து வந்த வன்னி மண்ணில் நிகழ்ந்து கொண்டிருந்த மாற்றத்தின் எதிரொலிப்பாகவே அமையலாயிற்று. இளைஞர் எழுச்சிகளையும், ஈழப்போராட்டங்களையும், அப்போராட்டங்கள் அம் மண்வாழ் மக்களின் வாழ்வியலில் எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தியது என்பதையும் முருகானந்தன் தனது கதைகளில் கூறு முற்பட்டார்.

அக்காலகட்டத்தில் வன்னி வாழ்க்கள் போராளிகளை எவ்வாறு நோக்கினர், அவர்களுடன் எவ்வாறான ஒரு அன்புப் பிணைப்புடன் வாழ்ந்து வந்தனர் என்பதனை மிக இயல்பாகவே முருகானந்தன் தனது கதைகளில் பதிவு செய்ய ஆரம்பித்தார். தலித்தியம், வர்க்கியம் எனத் தொடங்கிய அவரது இலக்கியப் பயணம் இவ்வாறாக அடுத்த கட்டத்திற்கு பரிணமிக்கையில், கூடவே கதை கூறும் முறையும், கையாளும் மொழி நடையும் நிலை மாற்றங்களுக்கு உட்பட்டு இவரது கதைகளைப் புதியதொரு எல்லைக்கு இட்டுச் சென்றன. அழகியல் அம்சங்கள் முருகானந்தனது கதைகளில் அதிகாரப்பட்டு நின்றதும் அக்காலகட்டங்களில் தான்.

போரின் அவலங்களை அதனாலான இடிபாடுகளைப் பாடுபொருளாகக் கொண்டதற்கும் அப்பால் போராட்ட களத்தில் நின்றபடியே போரின் அகோரத் தன்மையினை முருகானந்தன் சித்திரித்த முறைமை சிலிர்க்க வைப்பதாய் அமைந்தன. மருத்துவர் எனும் பணிநிலை முருகானந்தனது எழுத்துக்களில் செலுத்திய ஆதிக்கத்தினாலும் அவரது படைப்புகள் முக்கியத்துவம் பெறலாயின.

இந்தவகையில் இலக்கிய கவனத்தை ஈர்த்த யுத்தகாலக் கதைகளுடன் சிறந்த வாசிப்பனுவத்தினை தரவல்ல மற்றும் சில கதைகளையும் தொகுத்தது "ஒரு மணமகளைத் தேடி" எனும் தொகுதியினை **2005**இல் ச.முருகானந்தன், தனது எட்டாவது நூலாக வெளிக்கொணர்ந்தார். சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினரின் பதிப்பாக இந்நூல் அறுவடையாகியுள்ளது.

அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்ற உணர்வு நிலைகளின் கருப்பொருள்களின் வழி நின்று முருகானந்தன் சித்திரித்த படைப்புக்களே ஆரம்ப காலங்களில் அவரை அடையாளப்படுத்தி நின்றன. அவருக்கான ஒரு இலக்கிய அங்கீகாரத்தை வழங்கின. சாதி, சீதனம், பாலியல் பிறழ்வுகள், காதல், நட்பு மற்றும் பெண்ணியம் முதலான கருப்பொருட்களை முன்னிறுத்தியே இவர் தனது இலக்கியப் பயணத்தினை நகர்த்தலானார். சாகித்ய விருதினை தனதாக்கிக் கொண்ட "தரை மீன்கள்" மற்றும் "மீன்குஞ்சுகள்", "இது எங்கள் தேசம்",

"இனி வானம் வசப்படும்" போன்ற இவரது முன்னைய நான்கு சிறுகதைத் தொகுதிகளிலும் மேற்படி உணர் முறைமையைக் காணலாம்.

இந்நூலின் மகுடக் கதையான "ஒரு மண மகளைத் தேடி", "காத்திருப்பு", "தென்னங்கீற்று", "விடியும்... இனி விடியும்", "ஒரு பொல்லாப்பும் இல்லை", "இன்னொரு விடியலுக்காய்" போன்ற கதை களை உள்ளடக்கி வெளிவந்த "ஒரு மணமகளைத் தேடி..." சிறுகதைத் தொகுதியில் முருகானந்தனது நோக்குமுறை மாறுதல்களை எளிதில் அவதானிக்க லாம். போர்க்கால வாழ்வியல் மாற்றங்களை, சோகம் ததும்பும் நெஞ்சுடனும் தினமும் திகிலாய்த் தொடரும் மாறா வலியுடனும் வாழ்ந்த வன்னி வாழ் மக்களை மிக அற்புதமாகவே இக் கதைகளில் ஆசிரியர் பதிவு செய்திருப்பார்.

விறகுக்குச் சென்ற கணவனும் இன்னும் இருவரும் கெலியில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறியால் சிதறிப்போய் குருதி வெள்ளத்தில் கிடக்கும் அதே கணம் அவனது மனைவி தனக்குப் பிறந்த "ஆம்பிளைப்பிள்ளையுடன்" பூரித்துப்போய் கணவன் இனி வரவே மாட்டான் என்ற சேதி தெரியாமல் அவனது வரவுக்காக ஆர்வம் மேலிடக் காத்திருப்பதாகக் கதாசிரியர் கூறி நிற்கும் "காத்திருப்பு" கதை நெஞ்சைக் கவ்வும் வகையில் சித்திரிக்கப்பட்ட வகையில் சிறந்ததொரு வாசிப்பு தினைப்பைத் தருவதாக உள்ளது.

தனக்காக நிச்சயிக்கப்பட்ட கவிதா சுற்றி வளைத்து வந்த படையினரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டதால் மனமுடைந்து அலரிவிதையை அரைத்துச் சாப்பிட்டு பெரியாஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளை சாரங்கன் பட்ட மன உளைச்சலை ஆசிரியர் வாசகர்களும் உணரும்படி மிகத் துல்லியமாகவே வெளிப்படுத்துகிறார். அந் நிலையிலும் குடும்பத்தினரை எதிர்த்து அவளுக்கு அவன் வாழ்வளிக்க முற்பட்ட வேளையில் எதிர்பாராத விதமாக நிகழ்ந்த அவளின் பிரிவு அவனது இதயத்தை மட்டுமல்ல வாசகர்களது இயத்தையும் துளையிட்டு இரத்தம் கசிய வைப்பதாக உள்ளது. முடிவில் இத்தனை அராஜகங்களுக்கும் பின்னணியிலுள்ள எதிரியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற முனைப்புடன் தான் கொண்ட சபதத்தினை நிறைவேற்ற போராளியாக சாரங்கன் மாறுவதாக முருகானந்தன் கதையை முடித்திருப்பார். வெறுமனே உணர்ச்சிப் பின்புலத்தில் நிகழ்ந்தவொன்றாக அன்றி இளைஞர்களின் தார்மீக எழுச்சியை வாசகர்களுக்கு உணர்த்தத் தலைப்பட்ட வகையில் இக்கதை மிக்க கவனிப்பிற்குள்ளாகின்றது.

"நாங்கள் இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் ஒளிஞ்சு ஒளிஞ்சு ஓடுறது? தமிழராகப் பிறந்த ஒரே குற்றத்திற்காக குட்டக்குட்டக் குனியுறது எங்கட முட்டாள் தனம். எமக்கெதிரான அடக்குமுறையை எதிர்த்து நாங்கள் எல்லாம் போராட வேணும். எல்லாருமே போராட்டத்திலை இணைய வேணும்!" என அறை கூவல் விடுக்கும் ஒரு இளைஞனை முன்னிறுத்தி புனையப்பட்டிருக்கும் "இன்னொரு விடியலுக்காய்" கதை போர் நிகழ்ந்த களத்தின் பின்புலத்தினை, அங்கு நிலவிய நெருக்கடிகளை, இளைஞர் இயக்கங்களின் எழுச்சிநிலைகளை இயல் பானதாகவே படம் பிடித்திருக்கிறது. முருகானந்தன் கூறமுனைந்த செய்திக்கு அவரது மொழிநடை முண்டு கொடுப்பதாய் அமைந்திருப்பது நோக்கற்பாலது. தமிழர் தேசத்தின் காட்சியையே புரட்டிப் போட்ட இளைஞர் களின் எழுச்சிநிலைகளை அவர்களது தீவிர செயற்பாடு களை போராட்ட களத்தில் நின்று கொண்டு தான் உணர்ந்த படியே விபரிக்கும் முருகானந்தனது முறைமை உண்மையில் புத்திலக்கியம் ஒன்றிற்கான முன்னகவர்வாக அமையவல்லது!

போராளிகளின் தோற்றம், அவர்களது அன்றாட செயற்பாடுகள் போராட்ட களங்களில் அவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள், ஒவ்வொரு கணமும் செத்துப் பிழைக்க வேண்டிய அவர்களது நிச்சயமற்ற வாழ்வியல், எல்லாவற்றிற்கும் மேலாக தமிழினத்திற்காக அவர்கள் செய்த தியாகம் முதலானவற்றை வெகு நேர்த்தியாகவே படம் பிடித்திருக்கிறது. "ஒரு பொல்லாப்பும் இல்லை" சிறுகதை போராளிகளின் வாழ்வியலின் ஒரு ஆவணச் சித்திரமாகவும் இக்கதையினைக் கொள்ளலாம்.

"காத்திருப்பு" கதையில் பிரசவ வலியால் கமலா துடிதுடிக்கையில், பன்னீர்க்குடம் உடைத்து தண்ணீர் சீறுந்தருணம் மருத்துவமாது அவளை நோக்கிக் கூறும் "வாகசர்களில்" முருகானந்தன் எனும் எழுத்தாளனுள் ஒழிந்து கொண்டிருக்கும் மருத்துவர் முருகானந்தன் வெளிப்பட்டுநிற்கின்றார். மேலும் இது போலப் பல இடங்களிலும் மருத்துவர் முருகானந்தனின் பிரசன்னத் தைத் தரிசிக்க முடிகிறது.

வாழ்க்கை அற்றுப் போய்விட்டதொரு நிலையில் மன இருளில் வேறெதுவுமே தெரியாது, வடிகால் தேடி வாசற்படி தாண்டும் வசந்தாவின் கதை "பிறழ்வு". அப்பெண்ணின் பாலியல் சார்ந்த உணர்வுகளை மருத்து வராகவும், எழுத்தாளராகவும், சீர்மியராகவும் நின்று விரசங்கள், விசாரங்கள் ஏதுமின்றி முருகானந்தன் விபரித்துச் செல்லும் பாங்கு கதைக்கு ஒரு கனதியைச் சேர்த்திருக்கிறது. சுனாமி அனர்த்தங்களை, நிகழ்ந்த அவலங்களை "காலம் எனும் நதியிலே", "மெல்ல மெல்ல மாறினேனா" போன்ற கதைகளில் ஆசிரியர் உள்ளத்தைத் தொடும் வகையில் வெளிக்கொணர்ந் துள்ளார்.

ஆண் பெண் உறவுநிலை பற்றிப் பேசும் "நூல்வேலி", சாதிப்பிரச்சினையை அலசும் "முற்றத்து மல்லிகைப் பூ", விதவா விவாகம் பற்றித் தொட்டுச் செல்லும் "புதுவசந்தம்", "சுகமான ராகங்கள்" போன்ற கதைகள் இலகுவாசிப்பிற்குரியனவாகவும், சுவாரசியம் மிக்கனவாகவும் அமைந்து வாசகர்களுக்கு விருந்தளிப் பனவாயுள்ளன. வடபகுதி மக்களுக்கே உரித்தான, பேச்சுத் தமிழ் இயல்பாகவே இத்தொகுதிக் கதைகளில் கையாளப்பட்டிருப்பதும் குறிப்பிடற்பாலது.

ஈழப்போர்க்காலங்களில் எழுதப்பட்ட சில கதைகள் அமரத்துவமுடைய இலக்கியங்களாக, சிறந்த புலப்பதிவுகளாகக் கொண்டாடப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலனவை போர்க்கால இலக்கியங்கள் எனும் மகுடத்தில் பெரு நூலாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுதியில் இடம்பெற்ற ச.முருகானந்தனது போர்க் காலக் கதைகளில் பெரும்பாலானவை அந்த வரிசையில் வைக்கப்படத்தக்கன! ஈழத்து இலக்கியத்திற்கு வளம் சேர்க்க வல்லன!

# போருடன் நீளும் எழுத்து எழுத்தாளர் ச.முருகானந்தனின் இரு தொகுதிகளை முன்னிறுத்திய பார்வை

வசந்தி தயாபரன்


உலகம், எண்ணற்ற கேள்விகளால் நிரம்பியது. அவிழ்க்க முடியாத கேள்விமுடிச்சுகள் பல தொன்றுதொட்டு மனிதனின் மனத்தை ஆட்டுவிக்கின்றன. அவன், அறிவியல் ஆன்மிகம் தர்க்கவியல் தத்துவவியல் என பல்வேறு கருவிகளின் துணைகொண்டு அவற்றை விடுவிக்க முயல்கிறான். இருப்பினும், மனிதன் அதீத சுயநலவாதியாக மாறிவருவது ஏன், மனித குலத்துக்கு எதிரான பேரவலங்கள் நிகழ்வது எதற்காக முதலிய கேள்விகள் தொடர்ந்து எமது மனதை நெருடுகின்றவை! அவற்றுக்கான விடைகளையும் அதே மனிதர்களின் வாழ்வினூடேயே தேடிக்கண்டு பிடிக்கும் சித்துவேலையை எழுத்தாளர்கள் நிகழ்த்தி வருகின்றனர். அதற்கு, எழுத்தாளர் டாக்டர், ச.முருகானந்தன் அவர்களும் விதிவிலக்கல்லர்.

ஈழத்து இலக்கியம், பெரும்பாலும் மண்ணின் தனித்துவங்களைப் பேசுவதாகவே எழுதப்பட்டு வந்துள்ளது. அவ்வகையில், போரைச்சுற்றிச் சுழல்கின்ற பல கதைகள், பல தளங்களினின்றும் பற்பல திசைகளிலிருந்தும் புறப்பட்டு ஈழத்து இலக்கியத்துக்கு வளம் சேர்த்துள்ளன. ஒரே சூழலில், ஒரே மண்ணில் வளர்ந்து பல்கிப்பெருகி செழித்து நிற்கும் விருட்சங்கள்! வகைகள் பல, அவற்றின் பயன்கள் பல! பலவண்ணப் பூக்கள், பல் சுவைக் கனிகள்! சிந்தையைத் தொட்டு அசைக்கும் அவற்றின் உணர்வு ஓட்டங்கள்!

படைப்பாளிகள் என்போர், சமூக அவலங்களைக் கண்டும், கேட்டும், உணர்ந்தும், அவற்றின் சுமை தாளாது எழுத்தாக அவற்றை உருமாற்றுகின்றனர். வைத்தியர் என்ற வகையில் ஒரு நெருக்கமான சாட்சியாக, தொடர்ச்சியாக அந்தச்சுமைகளை மனத்தில் தாங்கிய ச.மு அவர்கள் படைத்தவை, ஈழத்து இலக்கியத்தின் பெறுமதி மிக்க படைப்புகளாக மிளிர்கின்றன. தனது எழுத்துவாழ்வின் நீண்டதொரு காலப்பகுதியை அவலங்களும் அழுகுரல்களும் மொய்த்துப் போயிருந்த பூமியில் கழித்தவர், இப்படைப்பாளி. அது அந்நிலத்தை “விடுதல் இல்லா விருப்புடனான” வாழ்க்கை! உடலும் உளமும் ஒன்றித்து வாழ்ந்த தவ வாழ்க்கை!

கடமையுணர்வு கொண்ட வைத்தியர் என்பதற்கு அப்பால், எழுத்தாளனுக்கே உரிய அதீத ஒத்துணர்வினால் உந்தப்பட்டு, நோயாளிகளின் அவலங்களையெல்லாம் தன்னுடையதேபோல இவர் உணர்ந்த பான்மையை, இவரது படைப்புகள் பறைசாற்றுகின்றன. இரு நிலைகளுமே, “மானுடத்தின் நோயை அடையாளம் காணல் - அதற்குச் சிகிச்சை அளித்தல்” என்ற பொதுப்புள்ளியில் ஒருமிக்கின்றன. “தரைமீன்கள்“ தொகுதியில், “என்னுரை”யாக அவர் சொல்லும், “இலக்கியம் ஒரு மருத்துவமே”, என்ற வரி, ஆழமான பொருள் பொதிந்தது!

வாசகனைப் பிரமிப்பில் ஆழ்த்தாத, எளிமையான எழுத்து, வாசிப்புக்குத் துணைசெய்கின்றது. தானும் போர்ச்சூழலின் ஒரு அங்கமாகி, சமூகத்தைக் கனிவுடனும் அன்புடனும் நோக்கும் அவரது இயல்பான சுபாவமும், தொடர்ச்சியாக நிறைய எழுதி அவர் வளர்த்துக் கொண்ட



படைப்பாற்றலும், ஆக்கங்களுக்குக் கனதி சேர்ப்பன! அவரது, "பீனிக்ஸ் பறவையாய் எழுவோம்", "தரைமீன்கள்" என்ற இரு தொகுதிகள், போருடனான வாழ்வின் கோரமுகங்களை சிறுகதைகளாக வடிக்கின்றன. அவை, சமூகத்தின் பலதரப்பட்ட மனிதர்களது அனுபவங்களைத் தொட்டுச் செல்பவையாக, பன்முகப்பட்டவையாக, வெவ்வேறு நோக்குநிலைப்பட்டவையாக விரிகின்றன. அங்கு வாழ்ந்து முடித்த ஒவ்வொரு குடும்பத்தினதும் கதையும், ஒவ்வொரு வீட்டினதும் கதையும், அந்த நிலப்பரப்பின் வரலாற்று ஆவணத்தின் பக்கங்கள்! அம்மக்களுடனும் மண்ணுடனும் பிணைந் தும், வாழ்ந்தும் ச.மு. அவர்கள் பெற்றவையும் படைத் தவையும், அனுபவச்செறிவு மிக்கவை. போருக்குள்ளும் போரின் பின்பும் எழுந்த ஆக்கங்கள் சிலவற்றினூடாக அவற்றை நாமும் அனுபவிக்கவும், ச.மு. என்ற எழுத்தாளரைத் தரிசிக்கவும், இத்தொகுதிகள் துணையாகின்றன.

மணிமேகலை பிரசுரமாக வெளிவந்த "பீனிக்ஸ் பறவையாய் எழுவோம்" எனும் தொகுதியில் தனதுரையாக, "போரினால் விரட்டப்பட்டு, தொழில்கள் அனைத்தையும் இழந்து, இவர்கள் அனுபவித்த வேதனையின் வலிகளைப் பிறர் உணர்வது கடினம்...அவற்றின் ஒரு பகுதியைத்தான் நான் எனது கதைகளில் தரிசனமாக்கியுள்ளேன். இப்போது சொந்த ஊரிலே அகதி வாழ்வு" என ச.மு. கூறும் வரிகள் சத்தியமானவை. இத்தொகுதியில் உள்ள பன்னிரண்டு கதைகளில், "உச்சக்கட்டம்", "எத்தனை கோடி துன்பம்" "அம்மா வந்தாள்" என்பவற்றை போர்க்காலத்துக்கு உரியனவாகவும், "வெறும் சோற்றுக்கோ...", "தாய்மடி மண்", என்பவற்றை முகாம்காலத்துக்கு உரியனவாகவும், "நெருப்புமழை", "பீனிக்ஸ் பறவையாய்...", என்பவற்றை போருக்குப் பின்னான காலத்ததாகவும் ஒரு பகுப்புமுறையில் நோக்கலாம்.

"படுத்தவர் எழுவார் என்ற நிச்சயமின்றி" வாழ்கின்ற ஒரு வாழ்க்கை! அதற்குள் "ஒரு ஆள் செத்து மற்றவர் மிஞ்சக்கூடாது, செத்தால் எல்லோரும் ஒன்றாச் சாகவேணும்" என்ற விரக்தி, "சந்திராவைக் கண்டீர்களா?" என்று தேடித் திரிகின்ற அற்பசொற்ப நம்பிக்கையுடனான தவிப்பு, என முட்டிமோதும் உணர்வுக் கொந்தளிப்பைக் காட்டும் கதையாக "உச்சக் கட்டம்" உருவாகியுள்ளது.

இன்னொரு கதையான "எத்தனை கோடி துன்பம்", பல்கலைக்கழக மாணவி ஒருத்தியைச் சுற்றிச் சுழல்கிறது. ஊருக்குப் போகமுடியாதபடி பயணத் தடைகள் தந்த ஏக்கத்துடன், பெற்றோருடனான தொடர்புகள் அறவே துண்டிக்கப்பட்டதால் அவர்களது பாதுகாப்புப் பற்றிய பயமும் சேர்ந்துகொள்ள அவள் தவிக்கிறாள். மனம் பலவீனமான ஒரு தருணத்தில் அவள் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக் கொள்கிறாள். போரில் காயம் பட்டுச் சாகின்ற உயிர்களுக்கு அப்பால், மனத்துள் தினமும் பொருதப்படும் போர்கள் கண்ணுக்குத் தெரியாதவை. அவை, இளவயது மரணங்களுக்கும், குடும்பக் கட்டமைப்பின் குலைவுக்கும் காரணமாகிவிடுகின்றன என்பதை மிகவும் நாசூக்காகச் சொல்லும் கதை இது.

"அம்மா வந்தாள்" என்பது, ஆஸ்பத்திரி வாட்டில் படுத்தபடி, "அம்மா ஏன் வரவில்லை?" என்று தொடர்ந்து கேட்கும் சிறுமியை எமக்குக் காண்பிக்கிறது. முகச்சுளிப்பை ஏற்படுத்தும் "வாட்டின் கண்றாவிக் காட்சி! ஆஸ்பத்திரியில் பணிபுரிதல் என்பது, சீருடை கசங்காமல், மிடுக்குடன் உலாவருதல் என்ற எமது கற்பிதங்களைப் பொய்யாக்கும்படி, கடவுளர் நடமாடும் இடம் என்று "திக்கு நோக்கித் தொழவைக்கும்" வரிகள்! டொக்டர் ஒருவர் வழங்கும் நேரடிச் சாட்சியம் ஒன்றே, இக்கொடுமையை உலகுக்குக் கொண்டு சென்ற அற்புதம் நிகழ்ந்த இடமும் அதுவே! தாதி ஒருத்தியின் தாய்மையின் உச்சம் கதை முழுவதும் விரவிக்கிடக்கின்றது. நிச்சயமாக, இது இட்டுக்கட்டப்பட்ட கதையல்ல என்பதை, ஒவ்வொரு வரியும் உணர்ச்சிபொங்கக் கூறுகிறது.

ஒரு முகாம். அதற்குள் வாழ்க்கை என்ற பெயரிலான உயிர்வதை! பசியில் துடிக்கும் வயிறுகள்! "நாண் அணி களையும்...பசிப்பிணி என்னும் பாவி" என்ற ஓர் அருமையான வரியை, மணிமேகலை காப்பியம் கூறும். "வெறும் சோற்றுக்கோ..." எனும் கதை, முகாமில் பசியின் கொடுமை என்னவெல்லாம் செய்யத் தூண்டியது என இரு பெண்களின்வழி சொல்கிறது. வயிற்றில் பிள்ளையையும், மடியில் நெருப்பையும் சுமந்தபடி, தலைசுற்றலுடன் முகாமில் உணவுக்காக வரிசையில் நிற்கும் கர்ப்பிணித்தாய்! அவளது பிள்ளைகளின் பசி காணப் பொறுக்காது, எங்கே அவள் கண்டால் திட்டுவாளோ என்ற பதைபதைப்புடன் அக்குழந்தைகளுக்குச் சோறூட்டும் வேறொரு ஏழைப்பெண்! மனிதன் முட்கம்பிகளுக்குள் சிக்குண்டபோதும், அவன் வகுத்து வைத்த சாதியடுக்குகள் எங்குமே சிக்காது உயிருடன் தான் இருக்கின்றன என்ற கசப்புணர்வு ஒருபுறம், அவற்றைப் பொருட்படுத்தாது தாய்மையின் பரிவுடன் சோறூட்டும் பெண்ணை எண்ணிப் பெருமிதம் மறுபுறம், என இருவேறு உணர்ச்சிகள் எம்மைத் தழுவிக் கொள்கின்றன.

"நெருப்பு மழை" நிவாரணம் கிடைப்பதில் ஏற்படும் தாமதம், அதற்குப் பொறுப்பானவர்களின் அசமந்தப்போக்கு என்பவை குழந்தைகளின் உயிர்களையும் காவுகொள்கின்ற கொடுமையை நெஞ்சுருகும் வண்ணம் சொல்கிறது. பசிமரணங்களின் பின்னால் உள்ள அரசியல்வலை திடுக்குற வைக்கிறது. நாம் வாழ்வது மானுடர்கள் மத்தியில்தானா என்ற சீற்றமும் பொங்குகிறது!

"பீனிக்ஸ் பறவைகளாய் எழுவோம்" கதை, "மீண்டெழல்" பற்றிய சிந்தனையை விதைப்பதாக, வாழ்வின்மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முனைவதாக அமைந்துள்ளது. வாழ்க்கை முழுவதும், பார்த்துப் பார்த்துச் சேகரித்த எல்லாமே பொலபொல வென உதிர்ந்துவிட்ட காட்சி! வீடில்லை, பாத்திரம் பண்டம் இல்லை, வயிற்றுக்குச் சாப்பாடில்லை. எதுவுமேயில்லை! முகங்களில் படிந்து, நிரந்தரமாகத் தங்கிவிட்ட சோகக்குறிகள், வெறித்த விழிகள், பசித்த வயிறுகள்! தோற்றவர்களை ஏதிலிகளாக அடையாளப்படுத்திவிட்டு போர் நின்றுவிட்டது. ஆனால். கடும் உழைப்பு அவர்களிடம் உள்ள பெரும் சொத்து! நிச்சயம் அவர்கள் மீண்டெழுவார்கள்!


எழுத்தாளர் ச.முருகானந்தனின் எழுத்துலக வாழ்வின் வெள்ளிவிழா ஆண்டான *2003*இல், மல்லிகை

வெளியீடாக வந்ததே, “தரைமீன் கள்” தொகுதி. வன்னி மண்ணில் வாழ்ந்துகொண்டு, “அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் எழுதியவர்” என ஜீவா தனது முன்னுரையில் வியக் கின்றமை, வெறும் புகழ்ச்சியல்ல, என்பது இலக்கிய உலகம் அறிந்த செய்தி! இத்தொகுதியின் கதைகள் எழுந்த காலப்பகுதி போர்க்காலமாக இருந்த தால், “புதைகுழி”, “மீட்பு”, “முரண்பாடுகள்”, “சோதனை மேல் சோதனை”, “தரைமீன்கள்”, என்ப வற்றை அக்காலத்துக்குரிய கதை களாகப் பதிவுசெய்ய லாம். ஏனைய வகைப்பாடுகள் இதற்குப் பொருந்து வன வல்ல.

அப்பாவிகளைச் சித்திர வதை செய்தும் வன்புணர்ச்சி செய்தும் புதைகுழியில் இடுதல் என்பவை, 1997இல் நாம் அடிக்கடி கேள்விப்படும் சம்பவங்களாக இருந்தன. அப்படிச் செய்துவந்த ஒருவனால், தனது மனச்சாட்சியைப் புதைக்க முடியாமல் போனமையால் ஏற்படும் உளவியல் சிக்கல்கள் பற்றிய கதை “புதைகுழி”. அந்த மனத்தளம் பல், அவனது உயிருக்கே கூற்றாக அமைவதை நாம் காண்கிறோம். “இது அவனுக்குப் பொருத்தமான தண்டனைதான்” என எமது மனம் வன்மத்துடன் கறுவிக்கொள்ளும் அதேவேளையில், மனிதர்கள் இப்போதெல்லாம் மனச்சாட்சியையும் சேர்த்தே கொன்று புதைத்து விடுகிறார்களோ என்ற நியாயமான சந்தேகமும் எமக்குள் இப்போதெல்லாம் உருக் கொண்டுள்ளது.

“இது ஓர் இயக்கத்தின்ர போராட்டமல்ல, இனத்தின்ர போராட்டம்... வாழுற வயதில தங்கட உயிரைக் கொடுத்திருக்கிறாங்கள்... நாங்களும் இருந்து என்ன பிரயோசனம்....நாங்கள் பங்காளராக வர வேண்டும்...” என்ற சிந்தனை உருப்பெற்ற காலம் அது! அதனைச் சுட்டுவனவாக “மீட்பு” கதையில் நிகழும் சம்பவங்கள் வெகு யதார்த்த மாக வடிக்கப் பட்டுள்ளன. “மீட்புநிதி எடுத்தனிங் களோ? தாலிக் கொடி மீட்டாச்சோ?” என்று கேட்ட மனைவி மீது சீறி விழு கிறார் செல்லையா. “அதுக்கென்ன அவசரம்? முதலில இந்த மண்ணை மீட்கவேணும். நான் மண் மீட்பு நிதி யை மீளப் பெறப் போறதில்லை...” என்ற அவரது பதில் மாறிவிட்ட மனங்களின் மாண்பை எமக்குப் புரியவைத்துவிடுகிறது.

வாழ்வாதாரத்தைத் தொலைத்து நிற்கும் மீனவக் குடும்பம் ஒன்று, தனது குடும்பத்தலைவனை அநியாயமாக இழந்து தவிக்கின்ற சோகம், “தரை மீன்கள்” என்ற மிகப் பொருத்தமான தலைப்பில், நெஞ் சைப் பிழியும் கதையாகத் தீட்டப் பட்டுள்ளது. எத்தனை எத்தனை சட்டங்கள்! பாதுகாப்பு வலயச் சட்ட மும், மீன்பிடித் தடைச்சட்டமும் கடல் தாயின் குழந்தைகளை அவளிட மிருந்து பிரித்துவிட்டன. கரையில் கவிழ்க்கப்பட்ட வள்ளங்கள், அறுந்த படி கிடக்கும் வலைகள், கடலிலிருந்து வெடிக்கும் ஷெல்கள், காதைச் செவிடாக்கும் பீரங்கி முழக்கங்கள், பசித்த வயிறுகளின் ஓலங்கள் எல் லாமே சின்னச் சின்ன வசனங்களில் எமது நெஞ்சைக் கூறுபோடுகின்றன. நிராயுதபாணிகளான மீனவர்கள் கறுப்புச் சட்டைக் காரரால் சுடப்பட்டு, சடலங்களாக வீடு திரும்புவதுடன் காட்சி நிறைகிறது. உலகமே அதிரும் படி கடற்கரையில் அழுகுரல் கேட் கிறது. வயிறுகள் கருவாடாகக் காய்ந்து




கிடக்கின்றன!

இந்த இரு தொகுதிகளிலும் மருத்துவரின் கண்கள் வழியாகவும், மெல்லுணர்வு படைத்த மானுட னின் கண்கள் வழியாகவும், ச.மு. போர் தின்று கொண்டிருக்கும் உலகைப் பார்க்கிறார், எமக்கும் காட்டு கிறார்! அங்கு வியாபித்திருப்பதோ மானுடத்தைத் தேடித் தேடித் திரிகின்ற ஓர் எழுத்தாளனின் இதயத் துடிப்பு! “தரைமீன்கள்” தொகுதியில் உள்ள “தெளிவு” கதையில், கதாநாயகனைப் பார்த்து அவனது நண்பன் சொல்வதாக சில வரிகள் உள்ளன. “வெறும் காசும் சொகுசும் ஆடம்பரமும்தான் வாழ்க்கை என நினைத்துக் கொண்டி ருந்தேன். அதற்கும் மேல் வாழ்க்கையில் பல விடயங்கள் இருக்கு. உனக்குக் கிடைக்கிற ஆத்மதிருப்தி! அதற்கு முன்னால்...” என்ற வரிகள் எழுத்தாளர் தன்னைப் பற்றித் தானே பேசும் வரிகளே! ஆரவார மில்லாத எளிமையான எழுத்து, ஓங்கி மிதிக்காத நடை, அதிகார தோரணை இல்லாத வழிநடத்தல், மானுடத்திற் கான ஒரே நீதியை விழையும் நல்மனம், இவை ச.மு.வின் எழுத் தின் பண்புநலன்கள்! அடக்குமுறை, அட்டூழியம், சுய நலம், சுரண்டல் என்பவற்றால் சூழப்பட்டு, மூச்சுத் திணறி “வாழ்ந்து” கொண்டிருக்கும் எமக்கு, சற்றே ஆசுவாசம் அளிக்கும் நலமிக்க உயிர்க்காற்று!

எவரைப் பற்றியும் சும்மாவேனும் எள்ளலாகப் பேசாத, பகைமை பாராட் டாத அந்த மெல்லிதயம், போரின் போதும் அதன்பின்னும் எப்படியெல் லாம் நொந்து துடித்தது, உணர்ச்சி களின் கனத்தால் எவ்வாறு துவண்டு, முட்டி வெடித்தது, அந்த அவலங்களை எமக்கெல்லாம் எடுத்துச் சொல்லிவிட எவ்வளவுதூரம் விழைந்தது, என்பதை ஒவ்வொரு கதையும் உரத்துக் கூறு கிறது. மீண்டும் மீண்டும் வாசிக்கை யில், அக்கதை களின் வரிகளுக்குள் தோய்ந்து, நாமும் பின்னோக்கிச் சென்று, மீண்டும் அக்கணங்களுக் குள் வாழ்கிறோம். அவை ஆறக் கூடாத, ஆற்றக்கூடாத காயங்கள்! என்றுமே மறக்கக்கூடாத நினைவுகள்!

# காலத்தின் சாட்சியமாகும் ச.முருகானந்தன் கதைகள்

■ தாட்சாயணி


- தாட்சாயணி -

சிறுகதைகள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் என்று சொல்வார்கள். அவ்வாறு காலத்தை உரியவகையில் பிரதிபலித்து, அனுபவங்களின் சாரலைப் பிழியும் எழுத்துக்கள் ச.முருகானந்தனுடையவை. ச.முருகானந்தன் ஒரு மருத்துவர். மருத்துவர்கள் காணும் உலகம் வித்தியாசமானது. ஆனாலும் மருத்துவர்கள் சமூக மாற்றத்துக்காக யோசிக்கத் துவங்கும் போதே அவர்களது பேனாவும் உயிர் கொள்ள ஆரம்பிக்கிறது. அவ்வகையில் இதுகால வரை மருத்துவர்களாகவிருந்து இலக்கியம் படைத்த பேராசிரியர் நந்தி மற்றும் டொக்டர் எம்.கே.முருகானந்தன் வரிசையில் டொக்டர் ச.முருகானந்தனும் இணைந்திருக்கிறார். அதிகரித்த வேலைப்பளுவிற்கு மத்தியிலும் தொடர்ச்சியாக இலக்கியத்தில் இயங்குவது எல்லோராலும் முடியக்கூடிய ஒன்றல்ல. அவ்விதத்தில் ச.முருகானந்தன் செயற்படுவிசை கூடியவர். அதனையே அவரது தொடர்ச்சியான எழுத்து அறுவடை உணர்த்தி நிற்கிறது.

அவருடைய சிறுகதைத் தொகுப்புகளில் ஒன்றாகிய "உன் அருமை அறியாமல் போனேனே அம்மா" பதினாறு கதைகளை உள்ளடக்கமாகக் கொண்டது. அநேகமானவை யுத்தகால நெருக்குதல்களைக் கூறும் கதைகளே.கதைகளில் நாம் காணும் அவலங்கள் யாவும் எம்மால் நிதர்சனமாக ஒரு காலத்தில் உணரப்பட்டவை. யுத்தம் தவிர்ந்த குடும்பங்களில் ஏற்படும் முரண்பாடுகள், மனபேதங்கள், சந்தேகங்கள் என்பனவும் கதைகளில் தலை காட்டு கின்றன. ஆண், பெண் உறவுகளும் அவற்றுக்கிடையே ஏற்படும் உரசல்களும் மனோதத்துவ ரீதியாக நோக்கப் பட்டு அணுகப்படுகின்றன. எனினும் கதாசிரியருடைய பாத்திர படைப்புகளில் இலட்சியவாதப் பாத்திரங்கள் தோன்றுவது சற்றே யதார்த்தத்துக்குப் புறம்பானதாகக் காணப்படுகின்றது. உதாரணமாக பாடசாலையில் படிக்கின்ற கதைசொல்லியாக இருந்தால் அவன் மருத்துவராகும் தகுதி கொண்டவனாகவோ அல்லது ஒருவனுக்கு வாய்க்கும் மனைவியைப் பற்றிக் கூறுவதென்றால் அவளைப் பேரழகியாகக் காட்சிப் படுத்துவதோ சற்று சலிப்பை ஏற்படுத்துவதாக உள்ளன. மனிதர்கள் பலமும், பலவீனமும் ஒன்று சேர்ந்தவர்கள். அவர்களை அவர்களது பலவீனங்களோடு காட்சிப்படுத்துவதே கதையோடும், பாத்திரங்களோடும் ஒன்ற உதவும் என்று நம்புகிறேன்.


இத் தொகுதியில் மொத்தம் பதினாறு கதைகள் உள்ளன. அவற்றில் யுத்தப்பாதிப்புகள் சார்ந்து எட்டுக் கதைகளும், சமூகம், காதல், குடும்ப வாழ்க்கை சார்ந்து ஆறு கதைகளும், இனப் புரிந்துணர்வு சார்ந்து இரண்டு கதைகளும் இருப்பதை என் வாசிப்புச் சார்ந்து வகைப் படுத்திக் கொள்கிறேன். இக்கதைகளை வெகு அனாயாசமாக எழுத்தாளர் நகர்த்திக் செல்வதை எம்மால் வாசிப்பினூடு உணர முடியும். எல்லாத் தளங்களிலும் பாத்திரங்களின் மன ஓட்டங்களோடு கதைகள் விரைவு கொள்கின்றன.

யுத்தப் பாதிப்புக்களைச் சொல்லும் கதைகளை எடுத்துக் கொண்டால் யுத்தத்தின் பல்வேறு விளைவுகளும் தம் முகத்தை வெளிப்படுத்துகின்றன. இடப்பெயர்விலிருந்து, உயிர் அச்சம், காணாமல் போதல், கைது செய்யப்படல், சித்திரவதைக்குள்ளாதல், வல்லுறவு,மீளக் குடியமர்தல், நிலச் சுவீகரிப்பு போன்றன தமிழ் மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள் உள்ளபடி பதிவு செய்யப்படுகின்றன. ஒரு தாய் ஐந்து பிள்ளைகளைப் பெற்றும் அவளது இறப்பின் இறுதிக் கணத்தில் பெற்ற பிள்ளைகள் ஒருவரும் அருகில் இல்லாமல் போனமைக்கு யுத்தத்தைத் தவிர வேறு எது தான் காரணமாக இருக்க முடியும்? அப்படியொரு நிலையைச் சித்தரிக்கின்றது இத் தொகுப்பின் தலைப்புக் கதையான "உன்னருமை அறியாமல் போனேனே அம்மா". எவ்வளவு வசதி வாய்ப்புக்கள் இருந்தும் ஒரு காலகட்ட யுத்தம் உறவுகளைப் பிரித்து வைத்திருந்ததை வெகு இயல்பாகச் சொல்கிறது. இக்கதையின் மைய இழையினூடு

சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகள், ஆலயங்களுள் ஒவ்வொரு சாதியினருக்குமான நிலை, கடற்புலிகளின் தீரம் என்பன சரடுகளாகப் பின்னிப் பிணைகின்றன.

போரினால் சொந்த மண்ணில் குண்டு வீச்சுக்கள், உயிர்ப்பலிகள் என்றால் தெற்கில் ஏற்படும் பிரச்சினைகள் இன்னும் மோசமானவை. கொழும்பிற் குச் செல்லும், அங்கு வசிக்கும் தமிழ் இளைஞர்கள் யுத்தகாலத்தில் எதிர்கொண்ட சிக்கல்களை எத்தனை கதைகள் எழுதினாலும் எழுதித் தீர்க்க முடியாது. அத்தகைய கதைகள் இரண்டு இத் தொகுப்பில் உண்டு. “எங்கேயும் மனிதர்கள்” எனும் கதை அத்தகைய ஒரு இளைஞன் சித்திரவதைக்குட்பட்ட நிலையைப் பேசினாலும் அக்கதையின் முடிவு இன நல்லிணக்கத்திற் கான மனிதாபிமானமிக்க மனிதர்களை அடையாளப் படுத்துகிறது. எவ்வினத்தைச் சார்ந்தோர் ஒரு தமிழனைத் துன்புறுத்தினார்களோ, அவ்வினத்தைச் சேர்ந்த இன்னுமொரு சாரார் அவனைக் காப்பாற்றுவது இனக்கலவர காலத்தில் உயிர் தப்பிய பலரின் ஞாபகங் களை மீட்டுவதாக அமையும் என நம்புகிறேன். இதன் எதிர்முனைக் கதையாக அமையும் “வேலை இல்லாதவன்” கதையும் கொழும்பில் கைது செய்யப் படும் இளைஞனின் கதையே. எனினும் இங்கு அவன் கைது செய்யப்படுவதற்கு காரணமாக அமைவது அவனை வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி அவனிடமிருந்து பணத்தை அபகரித்த ஏஜென்சிக்காரப் பெண்ணே. வெளிநாட்டிற்கு செல்வதற்காகக் கொடுத்த பணத்திற்கான செயல் எதுவும் நிகழாமல் ஏமாற்றப் பட்டதனால், கொடுத்த பணத்தைத் திருப்பிக்கேட்ட மைக்காக அப்பெண் அவனை இயக்கமென்று சொல்லி இராணுவத்திற்கு காட்டிக் கொடுக்கின்றாள். யுத்தகாலத்தில் காட்டிக் கொடுப்புகளின் பக்கத்தைத் துலாம்பரமாகக் காட்டுகிறது இக்கதை. இறுதி யுத்தம் முடிந்து குடும்ப அங்கத்தவர்களை இழந்து சிறிய மகனோடு மீள்குடியேற்றத்திற்கு வரும் பெண்ணையும், அவள் போலவே குழந்தைகளோடு எஞ்சி நிற்கும் ஒரு ஆணையும் இணைத்து வைப்பதற்கான ஆரம்பப் புள்ளிகளை மீள் குடியேற்றம் தொடக்கி வைத்தாலும் அதையும் பொறுக்காத விதி பாம்பு வடிவில் அவன் உயிரைக் குடித்து விடுவதையும், துயரங்கள் அவளுக்குத் தொடர்கதை ஆவதையும் “சோகத்தைச் சுமப்பவர்கள்” பதிவு செய்கிறது. நாள் தோறும் எரிந்து வளர்ந்த யுத்தச் சூழலுக்குள் போராட்டம் எவ்வாறு மக்கள் மயப் பட்டது என்பதைத் தத்ரூபமாகச் சொல்கிறது “எரியும் பிரச்சினைகள்”. இயல்பான கால ஓட்டத்தில் தம்பி இயக்கத்திற்குப் போகக்கூடாது என நினைக்கும் அண்ணன், ஒரு தடவை காட்டு வழியூடாக சென்று இராணுவத்திடம் மயிரிழையில் தப்பி வந்த பிறகு கடிதம் எழுதி விட்டு இயக்கத்திற்குச் சென்ற தம்பியின் செயலின் நியாயத்தை வரவேற்கிறான். இக்கதை காடு வெட்டிக் கழனியாக்கிய தமிழ் விவசாயிகளின் உழைப்பையும் பொருளாதாரத்தடை அவர்களது வாழ்வாதாரத்தைச் சிதைத்ததையும் அதிலிருந்து மீள அவர்கள் உயிரைப் பணயம் வைத்துத் தொடர்ந்த பயணங்களையும் சித்திரிக்கிறது.

“தூண்டில் மீன்” கதை ஒரு காதல் கதை போல ஆரம்பிக்கினும் அதில் உள்ளுறைந்து காணப்படுவது போரின் கோர முகமாகிய வல்லுறவின் தடங்களே. அரபு நாட்டிலிருந்து திரும்பும் இளைஞன் ஊர் திரும்பும் போது தன் காதலி தன் நண்பனையே திருமணம் செய்திருந்தது கண்டு திகைத்து அதன் காரணங்களை அறிந்து கொள்கிறபோதுதான் அவள் இராணுவத்தினால் வல்லுறவாக்கப்பட்டதை அறிகிறான். கதையின் தலைப்பும், கொண்டு செல்லப்பட்ட பாணியும் கதைக்கருவின் தீவிரத்தன்மையைச் சற்றுக் குறைத்து விட்டதோ என்று தோன்றுகிறது. வெறுமனே செய்தி யாகவும் அவளது திருமணத்திற்கான நியாயப்படுத்தலு



படைப்பியக்கம் எண்ணற்ற பல தளமாற்றங்களுக்கும் உடைப்புகளுக்கும் வளர்ச்சிகளுக்கும் உட்பட்டு வரும் மிக முக்கிய மான காலகட்டத்தில் "மல்லிகை" தொடக்கம் "ஜீவநதி" வரைக்குமான ஈழத்து இலக்கிய மரபின் ஆழங்களிலிருந்து கிளைத்து விரிந்த ச. முருகானந்தனின் படைப்புக்கள் அவருக்கென ஒரு தரமான வாசகர் வட்டத்தை உருவாக்கி வைத்துள்ளது. இவ்வெற்றியானது இவர் பெற்ற எண்ணற்ற எல்லா விருதுகளை விட மிகப் பெறுமதியான உயர் விருது என்றே கூற வேண்டும். இல்லறத்தில் மட்டுமல்லாது இலக்கியத்திலும் இவருக்கு இணையாய், துணையாய் இனிதாய் வாழ்க்கை வாய்த்தமை இவரது வெற்றிகளுக்கு ஏதுவாய் அமைந்திட்ட ஒரு கொடுப்பனவு எனலாம்.

தான் கண்ட, அனுபவித்த கதா மாந்தர்களை நம் கண்முன்னே அச்சொட்டாகக் கொண்டு வருவதில் சமர்த்தர். இவரது கதைகள் சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் அநீதியான சிந்தனைகளுக்கு எதிர்வினையாக மட்டுமன்றி பலரது மௌனங்களுக்கும் மறுப்பு களுக்கும், மறதிகளுக்கும் எதிராக உறுதியான குரலில் பேசுபவை.

நீண்டகாலமாக இலக்கியம் மருத்துவம் என சமாந்தரமாகப் பயணிக்கின்ற போதும் மூத்த எழுத்தாளர் என்ற தலைவீக்கத்திற்குட்படாமலும் வித்துவக் காய்சலால் பீடிக்கப்படாமலும் அடுத்த தலை முறைப்படைப்பாளிகளுடன் நட்புப் பாராட்டி அவர்களைத் தட்டிக் கொடுத்து வளர்க்க முனைவது இவரிடம் காணப்படும் முக்கியமான ஆளுமைக்கூறு எனலாம்.

– கொற்றை பி. கிருஷ்ணானந்தன்

மாக இக்கதை பேசுபொருருளின் கனதியை இழந்திருப்ப தாக உணர முடிகிறது.

வெளிநாட்டில் எம்மவர்க்கான கதவுகள் தாராளமாகவே திறந்து கிடந்தாலும் அவர்களின் மனம் பிறந்த மண்ணின் இழந்து போன வசந்தங்களைத் தானே தேடி ஏங்குகிறது. அவ்வாறான முதியவர் ஒருவரின் ஊர் நோக்கிய திரும்பலையும் அவரது ஏக்கங்களையம் எடுத்துச் சொல்கிறது "தொலைந்து போன வசந்தங்கள்".

போரில் பசி தின்ற குழந்தையைப் பற்றி பேசும் கதை "என்று தணியும் இந்த…" படங்குக் கூடாரங்களில் வாழும் இடப்பெயர்வு வாழ்க்கையையும், உணவுப் பொருட்களுக்கான தேடலையும், வெறுந்தேநீரை மட்டுமே சீனி கூட இன்றிக் குடித்த அவலங்களையும், தொடர்ந்த பசி சிறுமியின் உயிர் குடித்த கொடுமையை யும் விழிகளில் நீர் விழ உணர்வு பூர்வமாக நிகழ்த்துகிறது கதை. தொகுதியின் இறுதிக் கதையான இக்கதை வாசக மனதில் ஏற்படுத்தும் உணர்வலைகள் இத்தொகுதியை வெற்றிகரமாக்குகின்றன எனலாம்.

தாயை இழந்த குடும்பமொன்றில் சின்னம்மா எவ்வாறு வியாபகம் கொள்கிறாள் என்று அவளது குடும்பத் சித்திரம் மூலம் விபரிக்கப்படும் அவளது குணப்பெருமைகள் சாதி எனும் புள்ளியில் சறுக்கிச் சரிவதையும், காலப்போக்கில் அவள் அதை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு படிப்படியாக மாறும் தருணங் களையும் "சின்னம்மா" கதையில் தரிசிக்க முடிகிறது. இக்கதை போராட்ட காலம் ஒவ்வொரு வீடுகளிலும் போராளிகளை உருவாக்கியதையும் சிறு தரிசனமாகக் காட்டுகிறது.

ஏனைய கதைகளை எடுத்துக் கொண்டால் "மேகலாவின் கம்ப்யூட்டர்" அறிவியல் வளர்ச்சியையும் மனித உணர்வுகள் இயந்திரங்களூடு கையாளப்படுவதை யும் சிறு கிண்டல் தொனியோடு சமகால இளைஞர் களைப் பாத்திரங்களாகக் கொண்டு வெளிப்படுத்த முனைகிறது. "பேய்களுக்குப் பயமில்லை" கதையும் மேல் நாட்டில் மருத்துவக் கல்வி பயிலப் போகும் எம் நாட்டு இளைஞர்களைப் பின்னணியாகக் கொண்டு அவர்களுக்கிடையே ஏற்படும் காதல், மற்றும் சாதி தொடர்பான சமூகப் பார்வையை நுண்ணியதாக முன் வைக்கிறது. திருமணமான இளம் தம்பதிகளுக்கிடையே ஏற்படும் உறவுச் சிக்கல்களையும், உணர்வுச் சஞ்சலங் களையும் "புதுப் பாதணிகளும் வெட்டுப்புண்களும்", "விலகும் திரைகள்" ஆகிய கதைகள் மனோதத்துவ ரீதியில் அணுகுகின்றன.

இன நல்லிணக்கத்தை வலியுறுத்தும் விதத்தில் போருக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு செயற்றிட் டங்களிலொன்றாக வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் நிகழ்ந்த உறவுப் பரிமாற்ற நிகழ்வின் ஊடாக இரு தரப்பிலும் ஏற்பட்ட இழப்புகளை உணர்வு பூர்வமாகப் பாத்திரங்களோடு உரையாட வைக்கிறது "மனிதம் புரிகிறது" கதை. இதே போலவே மலை நாட்டுக் கிராம மொன்றில் சில சுயநல வாதிகளால் இன முரண்பாடு கிளறி விடப்படும் வேளையில் அங்குள்ள மனிதாபி மானிகள் சிலரால் உண்மை நிலை பகிரங்கப் படுத்தப் பட்டு சமூக ஒருங்கிணைவு பேணப் படுவது "எல்லோரும் மனிதர்களே" கதையூடாக வெளிப்படுத்தப் படுகிறது.

"விகாரம்" எனும் கதை சமூகத்தில் காணப்படும் பிறழ்வு நிலையை வெளிப்படுத்துவதாக அமைந் துள்ளது. பிணச்சாலையொன்றில் காவலாளியாகக் கடமையாற்றுபவன், காமத்தினால் அலைக்கழிக்கப்ப ட்டு அங்கு வேலைக்கு வரும் பெண்ணைத் தன் இச்சைக்குப் பயன்படுத்திக் கொள்கிறான். அவள் வராத நாளொன்றில் தன் உடல் வேட்கை தாளாது பிண வறைக்குக் கொண்டு வரப்படும் இளம்பெண்ணின் பிணத்துடன் புணர்ந்து விடுகிறான். குற்றவுணர்ச்சி அவன் கழுத்தை இறுக்க, அப்பெண்ணின் ஆன்ம அவனைப் பழிவாங்குவதாக அவன் மரணத்தோடு முடிகிறது கதை. இக்கதை எம் சமூகத்தில் புரையோடி யிருக்கிற பல்வேறுபட்ட விகாரத் தன்மைகளையும் கதாசிரியர் நுணுகி நோக்கும் தன்மையைப் புலப்படுத்துகிறது.

இத்தொகுதியிலுள்ள பதினாறு கதைகளும் பல்வேறுபட்ட நெருக்கடிகளைக் கதாசிரியர் உணர்ந்த விதத்தில் சொல்லத் தலைப்பட்டுள்ளன. இக்கதைகளி னூடாகத் தான் சந்தித்த மனிதர்களையும், அவர்களின் பாடுகளையும் ஆவணப்படுத்தியுள்ளார் ச.முரு கானந்தன். இதன் மூலம் தன் மனதை அருட்டிக் கொண்டிருந்த விடயங்களை ஆறுதல்படுத்தும் முயற்சியில் அவர் வெற்றி கண்டுள்ளார் எனத் துணிந்து கூறலாம்.

"மணியம், இனி உன்னாலை குறி பார்த்துச் சுட முடியாது... பேரனைக் கூட்டிக் கொண்டு போ... இனி அவன் தான் சரியாகக் குறி பார்த்துச் சுடுவான்....."

சரஸ்வதி முகத்தில் அடித்தது போல் சொல்லி விட்டாள். மணியத்தால் தாங்க முடியவில்லை.

"சரஸ்வதியா சொன்னாள்? என்னைப் பார்த்தா சொன்னாள்....? மணியத்தினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"ஒலிம்பிக்கில் துப்பாக்கி சுடும் போட்டிக்குப் போனாலும் மணியத்திற்கு தான் முதற் பரிசு..." விதானையார் ஒருமுறை சொன்னதை இப்போதும் பெருமிதமாக நினைத்துக் கொண்டிருக்கையில், இந்த சரஸ்வதி...

"மணியம் இனி உன்னால் குறிபார்த்துச் சுட முடியாது..."

"என்னையா, என்னைப் பார்த்தா..."

உண்மை தான்!

மணியம் வேட்டு வைத்து விலங்கு விழாத சரித்திரமே கிடையாது.

இடியன் மணியம் என்றால் அந்த ஊரில் மட்டுமல்ல, அயலூர்க்காரர்களுக்குக் கூடத் தெரியும். அதுவும் குறிப்பாகக் குடாநாட்டு இடப் பெயர்ச்சி வன்னிக் கிராமங்களுக்கு, வந்தடைந்த காலகட்டத்தில் இறைச்சிப் பிரியர்களுக்கு மணியம் என்ற பெயர் பிரசித்தம்.

உடும்பு வேணுமென்றால் நாய்களோடு புறப்பட்டால் சில மணிகளில் நாலைந்து கொண்டு வந்து விடுவான். இரவு தங்கு வேட்டைக்குச் சென்று அவன் கட்டுப் போட்ட வத்தல்கள் கொழும்பு வரை என்ன, தூர ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்குக் கூட பார்சலில் பறக்கும்.

மணியம் எனக்கொரு கூழக்கடா....

மணியம் புறா இறைச்சி இருமலுக்கு நல்லமாம்...

மணியம் மயிலெண்ணை வேணும்... மயிலிறகும் வேணும்... காவடி எடுக்க வேணும்... மான்தோல் இருக்கோ?

எல்லோருக்கும் அட்சய பாத்திரம் போல் "ஓம்" என்று தலையசைப்பான். சொன்ன சொல்லு பிசகிய தில்லை. காசு களஞ்சு சுணங்கினாலும் பொருட்படுத்துவ தில்லை.

இடியன் என்ற அடைமொழி அவனுக்கு வரக் காரணம் அவன் பாவிக்கும் அடைப்புத் துப்பாக்கி தான்.

முறையான சன்னம் இல்லாத அடைப்புத் துவக்குகளைத் தான் வன்னி மக்கள் வயல் காவலின் போது பாவிப்பார்கள்.

இது அனுமதி பெறாத கள்ளத் துவக்கு.

அவர்களும் தான் என்ன செய்வார்கள்? கொக்கு, குரங்கு தொடக்கம், எருமைக்கடா, யானை வரை

# தாத்தா சுட்ட மான்

ச.முருகானந்தன்



கமங்களை அழிப்பது இங்கு சகஜம்.

துப்பாக்கிக்கு அனுமதி பெறுவதென்பது லேசான காரியமில்லை. முறையாக விண்ணப்பித்தா லும் துவக்குகள் வழங்கப் படாமையினால் இந்த மாதிரி இடித்து அடைத்துப் பாவிக்கும் துப்பாக்கிகளை வன்னிக் கமக்காரர்கள் பலரும் வைத்திருக்கிறார்கள்.

ஒரு தடவை அடைத்த பின் இந்தத் துவக்கினால் ஒரு முறை தான் சுட முடியும். மறுபடியும் இத்துப்பாக்கியைப் பாவிக்க வெண்டுமென்றால், மறுபடியும் சக்கை அடைக்க வேண்டும். தீப்பெட்டி மருந்து, தீக்குச்சி மருந்து, பிசுங்கான் துண்டுகள், பழைய சைக்கிள் போல்ஸ்கள் என பல பொருட்களை முறைப்படி கலந்து குழாயில் இடித்து அடைப்பார்கள்.

சக்கை அடைப்பதென்பது லேசுப்பட்ட காரியமில்லை. நல்ல அனுபவமுள்ளவர்களால் தான் இதை இடித்து அடைக்க முடியும். "கரணம் தப்பினால் மரணம்" என்ற சர்க்கஸ் காரனின் பணி போன்றது இது.

இதனால் கைவிரல்களையும், கண்களையும் இழந்தவர்களை ஒவ்வொரு கிராமத்திலும் பட்டியலிட முடியும்.

மணியத்திற்கு சின்ன வயதிலிருந்தே அத்துப் படி. இடித்து அடைப்பதிலும், சுடுவதிலும் அவன் வலு விண்ணன்.

பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்தில் முதன் முதலில் கிடைத்த துப்பாக்கி அனுபவம், முதன் முதலாக மீனாட்சி மாமியிடம் கிடைத்த அனுபவத்திற்கு குறைந்ததல்ல.

அந்த நினைவுகள் இந்த வயோதிபத்திலும் நினைத்துப் பார்க்கையில் பெருமிதம் மனதில் வரும்.

பொதுவாக வயல்கள் செழித்து வரும் காலங் களில் கூட்டமாக குழுவன்களோ, யானைகளோ, மான் களோ வந்து பயிர்களை சர்வநாசம் செய்வதால் இராக் காவல் காக்காமல் பயிர்களை காத்தெடுத்து அறுவடை செய்து பலன் பெற முடியாது. நெல்லுப் பொறுக்கும் கூட்டம் வரைதுவக்கு இல்லாமல் விரட்டப் படுவது கடினம்.

ஏத்துக்கட்டி அல்லது திட்டியில் காவல் கொட்டிலமைத்து. பனியிலும், மழையிலும், நுளம்புக் கடியிலும், காவலிருந்து தான் விவசாயிகள் உழைக் கிறார்கள். எரிகொள்ளி டோச்லைற், மண்ணெண்ணை, பழந்துணி, லாம்பு, தீப்பெட்டி, கயிறு, கத்தி என்று பல பொருட்களுடன் ஒரு இடியன் துவக்காவது வேண்டும்.

சில சமயங்களில் பாம்பு, பூச்சிப் பயமும் உண்டு. இவை எல்லாம் உழைக்கும் வன்னி விவசாயி களுக்குப் பழக்கப் பட்டு விட்டது. பயிர்களைச் சங்காரம் செய்துவிடும். தனியன் யானை வந்தால் விரட்டினாலும் போகாது. வெடி வைக்காது விட்டால் உயிருக்கே ஆபத்து வரலாம்.

மணியன் சிறுவனாகவும் இல்லாத, இளைஞ னாகவும் மாறாத விடலைப் பருவத்தில் ஒரு நாள் அப்பு அவனை வயலுக்குக் காவலுக்குக் கூட்டிச் சென்றார்.

அன்று தான் துவக்கை எப்படிக் கையாள வேண்டும், எப்படி குறிவைக்க வேண்டும், எப்படி அணைத்துக் கொண்டு சுட வேண்டும் என்று காட்டிக் கொடுத்தார்.

அப்புவுக்குக் கொஞ்சம் சுகமில்லை. கூடவே அசதி என்று கள்ளும் குடித்திருந்தார். "மணியம்... நித்திரையாய்ப் போகாத... அப்பு படுக்கப் போறன்... ஏதும் முறுகம் வாற சந்தடி என்றால் எழுப்பு... மேனை அயர்ந்து போகாத..." என்று மீண்டும் எச்சரித்து விட்டுப் படுத்தார்.

தூங்கித் தூங்கி விழித்திருந்த மணியத்தை சலசலப்பு உசாராக்கியது.

"எணேயப்பு எழும்பணை... முறுக சாதி வருகுது..." என்று அவரை உலுப்பினான். அவரோ எழும்புவதாயில்லை. ஆழ்ந்து குறட்டையுடன் திரும்பிப் படுத்தார். "எணேயப்பு பயமாயிருக்கணை..."

மணியத்திற்கு கையுமோடவில்லை, காலுமோட வில்லை. இடியனைக் கையிலெடுத்து, தோள்மூட்டோடு அணைத்தபடி குறி வைத்தான். நிலா ஒளியில் உருவ அசைவு தெரிந்தது. வில்லை அழுத்தினான். "டமார்" என்ற சத்தத்துடன் புறப்பட்டுச் சென்ற சன்னம் தவறாமல் விலங்கை வீழ்த்தியது.

இந்தச் சந்தடியில் கண்விழித்த அப்பு திடுக்கிட்டு டோச் லைட்டை அடித்தார். "என்னடா மேனை..."

அங்கே....!

ஒரு பெரிய யானை பிளிறியபடி சரிந்துபோய்க் கிடந்தது. அக்கம் பக்கத்து வயல்களில் காவலிலிருந்தவர் களும் வந்து கூடி யானையைப் பார்த்து அப்புவைப் பாராட்டினார்கள். மணியன் தான் சுட்டது என்று அவர் சொல்லியும் யாரும் நம்புவதாயில்லை.

"இந்தச் சின்னப் பொடியனா...? பொய்..."

எது எப்படியோ அன்றிலிருந்து மணியத்திற்கு துப்பாக்கி மேல் ஆசை வந்து விட்டது. "படிச்சு என்னத்தைக் கண்டது! எனக்கும் வேலை வெட்டிக்கு உதவி வேண்டுமே" என்ற அப்புவின் அருட்சியில் பள்ளிக்கூட வாசலுக்கு டாட்டா காட்டினான்.

கண்டறியாத கணிதமும் விஞ்ஞானமும்.

இவன் படிப்பை விட்டதில் அம்மாவுக்குக் கொஞ்சம் கவலை. அப்புவும் பிள்ளையும் சேர்ந்து நின்றமையினால் அவளது கூற்று எடுபடவில்லை.

மணியம் வளர்ந்து வந்தபோது, கமத்தோடு வேட்டையும், அவனது தொழிலாகிவிட்டது. மிக நீண்ட காலமாக இடியன் துவக்கைப் பார்த்து வந்தமையினால் "இடியன் மணியம்" என்ற மகுடம் அவனுக்குச் சூட்டப் பட்டுவிட்டது.

இப்பேர்ப்பட்ட மணியத்தைப் பார்த்து சரஸ்வதி என்ன சொல்லிவிட்டாள்!

"மணியம் உன்னால இனி சுடமுடியாது. பேரனைக் கூட்டிக் கொண்டு வேட்டைக்குப் போ.... அவன் தான் இனி குறிபார்த்துச் சுடுவான்."

சரஸ்வதியின் வார்த்தைகள் அவனைக் குடைந்தது. உண்மைதான்.

இப்ப கொஞ்ச நாளாக மணியத்தின் உடலில் ஒருவித சோர்வு தெரிகிறது. "மார்க்கண்டேயரைப் போல் என்றும் பதினாறாக எல்லோராலும் இருக்க முடியுமா என்ன?"

மணியம் இளமையிலேயே குழப்படி. கொஞ்சம் அப்படி இப்படித்தான், அது என்னவோ தெரியவில்லை. மணியத்தின் பார்வைப் பட்ட பெண்கள் அவனுக்கு

மறுப்புச் சொல்வதில்லை. ஆனால் காதல் என்று யாரும் மூச்சு விட்டால் அந்த நட்பு அதோடு சரி. வெட்டு ஒன்று துண்டு இரண்டு தான்.

இவனுக்கு ஒரு கால் கட்டுப் போடாவிட்டால் இவனைத் திருத்த முடியாதென்று அப்புவுக்குத் தெரிந்தது. மாமன் மகள் வள்ளியை சடக்கென்று பேசி முடித்து வைத்துவிட்டார்.

வள்ளி கட்டழகி தான். இவனது குதியன் குத்தலுக்கெல்லாம் ஈடு கொடுத்துத் தனது காலடியில் கட்டி வைத்திருந்தாள். செல்வியைப் பெற்றெடுத்த பின்னர் வள்ளியால் மணியத்திற்கு ஈடு சொல்ல முடியவில்லை. தனது அழுங்குப் பிடியைத் தளர்த்த வேண்டியதாயிற்று.

மணியத்தின் ஆஜானு பாகுவான தோற்றமும் வசீகரமான பேச்சும் பெண்களை ஈர்த்ததில் வியப் பில்லை. காமத்திற்குக் கண்ணில்லை என்பது போல குப்பத்து ஆராயி முதல் முதிர்க் கன்னி ஆசிரியை அம்பிகா வரை இவனிடம் தடக்கி விழுந்து எழுந்தவர்கள் ஏராளம்.

இவனது கூத்தையெல்லாம் பார்க்க முடியா மலோ என்னவோ மூன்று நாள் வயிற்றோட்டத்தில் வள்ளி கண்ணை மூடிக் கொண்டு விட்டாள்.

இதன் பின் இவனைத் தட்டிக் கேட்கவும் ஆளில்லாமல் போனது. மணியம் தனிக்காட்டு ராஜா வானான். மணியம் வைத்த குறி தப்பாது என்று இரட்டை அர்த்தத்தில் ஊரில் பேசிக் கொள்வார்கள்.

இந்த வரிசையில் கடைசிச் சில வருடங்களாக இவனுக்கு இனிப்புக் கொடுத்து வந்தவள் சரஸ்வதி. அவள் தான் சொல்லிவிட்டால் மணியத்திற்கு இனி குறிபார்த்துச் சுட முடியாது...

மணியத்தால் இதை ஜீரணிக்க முடியவில்லை.

கனத்த மூன்றடி நீளத் துப்பாக்கியை தூக்கு வதற்கு சங்கடமாய் வயது வந்ததை உணரும் சந்தர்ப் பங்கள் சிலவற்றைக் கடந்த சில நாட்களாக மணியம் உணர்ந்து தான் வருகிறான்.

துப்பாக்கியைத் தூக்குகின்ற போதெல்லாம் தோள் பட்டையில் ஒரு வித வலியை உணர்கிறான். இருந்து விட்டு எழும்பும் போது இலேசான தலை சுற்றல், இரவில் இரண்டு மூன்று தடவைங்கள் சலம் விட எழும்புதல் என்று தேக நிலையில் சில மாற்றங்களை அவனால் சகித்துக் கொள்வது கஸ்டமாக இருக்கிறது நாரிப்பிடிப்பு வேறு!

மூன்று நாட்களுக்கு முன் சரஸ்வதி அட சீ... இவ்வளவு தானா? என்று சலிப்போடு கேட்டது அவனது ஆண்மைக்குச் சவாலாகப் பட்டது.

காட்டிலே நண்பர்களோடு தலைவனாக நடை போட்டு எதிர்ப்படும் விலங்குகளை நொடிப் பொழுதில் சுட்டு வீழ்த்தி தினமும் இறைச்சிக் கறியும், பொரியலு மாக...

இறைச்சி என்றால் வள்ளிக்கு அலாதிப் பிரியம் மகள் செல்விக்கும், அவள் வயிற்றுப் பேரன் சந்திரனுக் கும் கூட இறைச்சி என்றால் ஒரு கோப்பை சோறு கூடுதலாக எடுக்கும்.

சரஸ்வதிக்கு மட்டும் என்னவாம்? எத்தனை நாட்கள் முழு ஈரலையே அவளிடம் கொடுத்து விட்டு வெறும் இறைச்சியோடு போயிருக்கிறான்.

முயல்கறி, பறவைக் கறி என்று அவள் ஆசையாய் கேட்கிற போதெல்லாம் தவறாமல் சுட்டு வந்து கொடுப் பான். உடும்பு உடம்போடு ஒட்டும் என்று கேட்டு பிடிப்பித்து வந்து ஆசை தீரச் சாப்பிடுவாளே!

அவளுக்கு இப்போது உடம்போடு ஒட்ட விருப்பமில்லையாம்.... பாவி...

"மணியத்திற்கு இனி குறிபார்த்துச் சுட முடியாது..." இந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவரது காதில் நாரசமாக ஒலிக்கிறது.

சுட்டுக் காட்டிறன்... சுட்டுக் காட்டிறன் என்று கறுவிக் கொண்டார். "எளிய பெண் ஜென்மம்..."

நண்பர்களோடு காட்டிலே சிறாம்பி கட்டி, ஏத்திலே ஏறி அமர்ந்து கொண்டு குழுவனையும், மரையையும் குறி பிசகாமல் சுட்டு விழுத்தியதெல்லாம் வெறும் பழங்கதையா?

கூட்டமாக அமர்ந்திருக்கும் பறவைகளை கைதட்டிப் பெரும் ஓசை எழுப்பிக் கலைத்து, அவை கூட்டமாய்ச் சிதறிப் பறக்கும் போது சுட்டு ஒரே தடவையில் இரண்டு மூன்று பறவைகளைப் "பொத் பொத்" என்று வீழ்த்தியது எல்லாம் இனி முடியாதா.... ?

தலை மயிர் இன்னும் வெளுக்கவில்லை. அங் கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளிக் கம்பி களாக...

இந்த மீசையும், தாடை மயிரும்தான் கொஞ்சம் பிசகு பண்ணியது "இந்தக் காலத்துப் பசங்க டையோ எதோ ஒண்ணு பூசுறாங்களே..." என்று நினைத்துக் கொள் வார். பின்னர் தனது நினைப்பை எண்ணிச் சிரிப்பார்.

இப்போது நண்பர்கள் அதிகம் அவரோடு காட்டுக்கு வருவதில்லை. எல்லாம் ஒரு வயசுக்குத் தானோ? பேரன் சந்திரனைத் தான் தேவைப்படும். போது கூட்டிச் செல்வார்.

"தாத்தா நீங்க அந்த நாளயிலை யானையை சுட்டீங்களாமே?" அவன் ஆர்வமாகக் கேட்கும் போது இப்பவும் பெருமிதம் மனதை தாலாட்டும்.

"தாத்தா.... இனி இந்தத் துவக்கு வேண்டாம்... நல்ல மெசின் கண்ணோடு வேட்டைக்குப் போகலாம்.... நாலைஞ்சு தரம் சுட்டாலாவது ஒண்ணை விழுத்தலாம் தானே?"

"உன் தாத்தா கவரி மானடா... ஒரு தரம் குறி பார்த்துச் சுட்டால் சுட்டது தான்..."

காட்டிலே பேரனுடன் நடந்து கொண்டிருக் கையில் எதிரே ஒரு மான்! டோர்ச்சை அதன் கண்களுக்கு அடிக்கும் படி பேரனிடம் கொடுத்து விட்டு மானைக் குறி பார்த்தார். மானின் முகம் மங்கலாக இரண்டு மூன்று முகங்களாக அவரை அலைக்களித்தது.

அது திரும்பி ஓட முன்னரே வெடி வைக்க வேண்டும்.

"டுமீல்"

சூடு பட்ட மான் அலறிக் கொண்டு ஓடி வீழ்ந்தது. ஆவேசம் வந்தவர் போல் மானருகில் சென்று குத்திக் கிழித்து ஈரலைப் பிடுங்கி எடுத்தார்.

"இதைக் கொண்டு போய் சரஸ்வதி மாமி யிட்டைக் கொடு தாத்தா சுட்ட மான்... சமைச்சு வைக்கட்டாம் என்று..."

இடியன் மணியத்தால் இனியும் சுட முடியும்!

பேராசிரியர் செ.யோகராசா




# வித்தியாசமாக பொழியும் “கோடைமழை”

*சமகால ஈழத்துச் சிறுகதைச் செல்நிறையை மனங்கொண்டு “கோடை மழை” தொகுப்பு ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் ஏற்படுத்திய சில தடங்கள் பற்றி சுருக்காக அவதானிப்பதே இவ்வேளை பொருத்தமானதாக்கப்படுகின்றது.*

சமகால ஈழத்துப்பிரச்சினைகளுள் முதன்மையானது பொருளாதார நெருக்கடியால் அன்றாட வாழ்க்கை எதிர்கொள்ளும் பெரும் பாதிப்பாகும். இத்தகைய விடயம் பற்றி பேசுகின்ற பிறகதைகளுடன் ஒப்பிட்டு நினைவு கூர்கின்றபோது “ஏற்றம்” என்ற சிறுகதை விலையேற்றம் பற்றிய பத்திரிகை செய்திகளால் குடும்பஸ்தனொருவனுக்கேற்படும் உடல் பாதிப்பை நடுக்கமேற்படுதல் - வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு நோக்குகளில் குடும்பப் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்ற கதைகளும் ஒன்றுக்கு மேற்படவுள்ளன. விலகிடும் திரைகள் இவற்றுள் முக்கியானது. குடும்பப் பெண்ணொருத்தியின் உடல் உணர்ச்சிகள் பற்றித்துணிச்சலான முறையில் உரத்தகுரலில் வெளிப்படுத்துவது “கு.ப.ராவின் “சிறிது வெளிச்சம்” சிறிதளவே வெளிப்படுத்துவது இலக்கிய ஆர்வலருக்கு நினைவு வரக்கூடும். இதில் வரும் பெண் கணவனிடம் கேட்கும் முக்கியமான கேள்விகள் : “உங்களுக்கு வேற யாரிலாவது விருப்பம் இருக்கா?... அல்லது யாருடனாவது...?” “ஏன்? உங்களுக்கு ஏலாதா?” இது ஈழத்துப்பெண்ணின் முதற் குரலாகும். கதையின் முடிவு கதையின் கருவுக்கு ஏற்றாற்போல “ஈகோ” என்ற திரை திரையாக விருந்தாலும் முற்குறிப்பிட்ட கேள்விகள் ஒரு குடும்பப் பெண் என்ற நிலையில் ஈழத்துச் சிறுகதையுலகிற்குப் புதுக்குரல்கள்! முற்குறிப்பிட்டது போல, துணிச்சலான குரல்கள் என்பதை மறுக்க முடியாது!




“கோடை மழை” குடும்பப் பிரச்சினை சார்ந்த இன்னொரு கதை. உடலுறவு கொள்ள முடியாத நோயுற்ற மனைவி, விதவையாயுள்ள தனது கணவனது முன்னாள் காதலியை இருவரது சம்மதத்துடனும் திருமண பந்தத்தின் ஊடாக சேர்த்து வைக்க முயற்சிக்கிறாள். அவள் வைத்திய சாலையில் அனுதிக்கப்பட்ட நிலையில் கணவன் நிச்சயார்த்தப் பெண்ணுடன் உடலுறவு கொள்ள முயல்கின்றான். உரிய தருணம் ஆஸ்பத்திரியிலிருந்து அவனது மனைவி இறந்து விட்டதான செய்தியைச் சொல்லும் பொருட்டு தொலைபேசி மணி அடிப்பதாக கதை முடிவடைகிறது. கதாசிரியர் சொல்ல விழைந்த செய்தி எதுவென்பதனை வாசகர் ஊகித்திருப்பர். வித்தியாசமான முடிவும் முடிவை வித்தியாசமான உத்திமூலம் சொல்ல வருவதும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றிற்கு புதியன!

மற்றொரு சிறுகதையான “குழந்தைகள் உலகம்” குழந்தைகளின் உளவியலுக்கேற்ப நகர்ந்து வெற்றி பெருகின்றது என்ற விதத்தில் வித்தியாசமானது.

குடும்பக்கதைகள் மேற்கூறியவாறை, பாரம்பரியமாக நிலவி வரும்


பேய்கள் பற்றி எழுந்த கதையாகிறது. "பேய்களுக்குப் பயமில்லை" பேய்கள் இருக்கிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் நகர்ந்து சென்று எதிர்பாராத விதத்திலான முடிவுடன் முடிவுறுகிறது; எனினும் மேலும் செதுக்கப்பட்டிருக்க வேண்டும்!.

போர்க்குப் பிற்பட்ட காலச் சூழலில் எழுந்த கதைகளாக சோகத்தைச் சுமப்பவள்; சிரித்து வாழ வேண்டும் என்பன உள்ளன. போர்ச் சூழலில் கணவனைப் பறி கொடுத்து குழந்தையுடன் தனிமை வாழ்வை எதிர்கொண்ட பெண்ணொருத்தி மறுமணம் செய்ய முற்பட்ட நிலையில் அதற்குடன்பட்டவன் எதிர் பாராவிதத்தில் மரணத்தை தழுவ, அவனது குழந்தை களுக்கும் தான் தாயாகின்ற நிலையை ஏற்று நான்கு குழந்தைகளுக்கு தாயாக முற்படும் முடிவு வித்தியாச மானதாகின்றது!

"சிரித்து வாழ வேண்டும்; போரில் ஒரு காலிழந்த ஒருவர் தனது துயரத்தைவிட, போரின் முடி வினால் இனத்திற்கு ஏற்பட்ட இழப்பை பேரிழப்பாகக் கருதுகின்ற தொருவித்தியாசமான பாத்திரத்தை முதன் முதலாக அறிமுகம் செய்கின்றது" இக்கதையை விட இன்னொரு வித்தியாசமான பாத்திரத்தை அறிமுகம் செய்கிறது, சோகங்களும் சுமைகளும் அதாவது கணவனை இழந்தவர்களுக்குக் கிடைக்கவுள்ள மரணச் சான்றிதழை "கணவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கைக்கு ஊறுவிளைக்கின்றமை காரணமாக பெற்றுக்கொள்ளாமல் திரும்புகின்றதொரு பெண்ணைச் சந்திக்க முடிகின்றது! பேரழிவுகள் ஏற்பட்டாலும் போர் சாதி பற்றிய சிதைவை அளிக்கத்தவறிவிட்டதை நாய் வால் நிறுவ முற்படு கின்றது. மேலும் செதுக்கப்பட வேண்டிய கதைகளின் வரிசையிலேயே இதுவும் சேர்கின்றது!

போரில் வீடிழந்த நிலையில் வீட்டுத்திட்டத்தி னால் பெரிய வீடு கிடைக்க விரும்பாமல் (ஏற்பின் கணவனைச் சுட்டுக் கொன்ற இராணுவத்திடம் கட்டித்






தரும் வீட்டினைப்பெற விரும்பாமை) இருக்கின்ற சிறு வீட்டுடன் திருப்தியடையும் பெண் ஒருத்தியை இனங்காட்டுகின்றது!

காதற்கதை என்ற வகைப்பாட்டில் அடங்கு கின்ற கதையான "காலதரிசனம்" போரில் கணவனை இழந்துள்ள முன்னாள் காதலியை காதலன் மறுமணம் செய்ய விரும்புகிறான். காதலனிடம் தான் எச்சில் கனி என்று கூறி அவன் மறுதலித்த நிலையில் "அவள் தனக்குத் துரோகம் செய்யவில்லை" என்ற காரணத்தை அவன் எடுத்துக்கூறி அவளை மறுமணத்திற்குச் சம்மதிக்க வைப்பதை வெளிப்படுத்துகின்றது. இவ் விதத்தில் வித்தியாசமானதொரு காதல் கதையா கின்றது!

ஆக, வலுவான பேசுபொருள் கொண்ட சில கதைகளையும் வலுவான குணாம்சம் கொண்ட சில பாத்திரங்களையும் கொண்ட சில கதைகளைக் கொண்டுள்ள இத் தொகுப்பு, வலுவற்ற பேசுபொருள் கொண்ட சில கதைகளையும் வலுவற்ற குணாம்சம் கொண்ட சில பாத்திரங்களையும் கொண்ட கதை களையும் உள்ளடக்கியுள்ளது! எனினும், வித்தியாசமான கதைகள் கொண்ட தொகுப்பு என்ற கோட்டில் அனைத்துக் கதைகளும் அங்கமித்துக் கொள்கின்றன. அத்தைய கோடு யதார்த்த நோக்குடையன என்ற வலுவான அத்திவாரத்தின் மேல் அமைந்துள்ளது. யதார்த்தம் என்ற நிலையில் பல சம்பவங்கள் இடம் பெறாமையும் அதனால் அன்றாட வாழ்க்கையின் இயல் நிலை வெளிப்படுவதும் யதார்த்தத்திற்கு புதியதொரு பரி மாணத்தை அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது!

# சமூகத்தின் மீதான விமர்சனமாக வெளிப்படும் "இனி வானம் வசப்படும்" சிறுகதைத் தொகுதி



■ எஸ்.ரஞ்சிதா

விமர்சனம் என்ற பதத்தை அடிக்கடி தமிழ் இலக்கிய பரப்பில் மிகையாகவும் சில மனிதர்களின் குறை நிறைகளைச் சுட்டும்போதும் பயன்படுத்திக் கொள்கின்றோம். ஒரு விடயம், சம்பவம், நபர் என்று விமர்சனத்திற்கான எல்லை பரந்து விரிந்து சென்று கொண்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக தமிழ் புனைகதை இலக்கிய வடிவங்களுக்கான விமர்சனப் பார்வையும் பல்கி பெருகி வளர்ச்சியடைந்துள்ளது. அந்த வகையில் இந்தக்கட்டுரையில் ச. முருகானந்தன் தமது சிறுகதைகளுக்கு உயிர்கொடுத்துள்ள கதா பாத்திரங்களின் பண்புகள் மாத்திரமே விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது என்பதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

ச. முருகானந்தன் என்ற பெயர் அடிக்கடி தமிழ் இலக்கிய உலகில் பேசப்பட்டாலும் இதுவே முதல் முறை "இனி வானம் வசப்படும்" என்னும் சிறுகதைத் தொகுதியினூடாக இவ் இலக்கிய படைப்பாளியையும் அவரது சிறுகதைகளையும் நாம் சுவைப்பது. பொது வாக மருத்துவ துறையை அலங்கரிப்பவர்கள் இலக்கியத்துறையை அலங்கரித்து பெயரும் புகழும் வாங்குவது வியப்பளிக்கின்றது. டாக்டர் நந்தி, டாக்டர் தி. ஞானசேகரன், இவர்களை அடுத்து முருகானந்தன் என்று பட்டியல் நீண்டு கொண்டு தான் செல்கின்றது. யாழ்ப்பாணம் கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகானந்தன் அவர்கள் சிறுகதை, குறுநாவல்கள், விமர்சனக்கட்டுரைகள், கவிதைகள் என இலக்கியத்தில் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தி படைப்பிலக்கியங் களை அருளிய ஒருவர். பிரகவாத ஆனந்த வன்னேரி ஐயா, வன்னியன், தமிழ்ப்பித்தன், கந்த மகிழ்னன், கருணைமுருகு என்னும் புனைபெயர்களைத் தாங்கியும் இவரது படைப்புக்கள் ஈழத்தில் வெளிவந்திருக்கின்றன. "மீன் குஞ்சுகள்", "தரைமீன்கள்", "இது எங்கள் தேசம்", "இனி வானம் வசப்படும்", "ஒரு மணமகனைத் தேடி", "நாம் பிறந்த மண்" ஆகிய சிறுகதைத் தொகுதிகளில் இவரது சமூகப்பார்வை மிகத் தெளிவாக புலனாகின்றது. அந்த வகையில் இவரது "இனி வானம் வசப்படும்" என்னும் சிறுகதைத் தொகுதியிலும் இந்தச் சமுதாயப் பார்வை, அதன் மீதான விமர்சனம் எவ்வாறெல்லாம் வெளிப்படுகின்றது என்பதை இவர் இச்சிறுகதைத் தொகுதியில் படைத்த பாத்திரங்களை முன்னிறுத்தி நோக்குவோம்.

ஆண் - பெண் உறவு என்பதும் அதன் மீது முன் வைக்கப்படும் விமர்சனம் என்பதும் புனைகதை இலக்கி யங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்ற ஒன்றுதான். "இனி வானம் வசப்படும்" என்ற சிறுகதையில் கணவன் - மனைவி என்பதைத் தாண்டி பெண்ணியம் என்ற சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு இச்சிறுகதை யில் வரும் சந்திரா தன் கணவன் சுந்தரத்தின் மீது கோபப் படுவதையும் பின்னர் தன் பொருத்தமற்ற கோபத்தை உணர்ந்து அவனோடு இயல்பாக வாழமுற்படுவதையும் இச்சிறுகதை ஆசிரியர் கருவாகக் கொண்டு கதையை நகர்த்தியுள்ளார்.

"எல்லாவற்றிலும் பெண்கள் பணிந்துதான் போக வேண்டுமா? நான் கதைத்ததில் என்ன தவறு? இதெல்லாம் சொல்லிக் காட்ட வேண்டியவைதானே? நானும் அவரைப் போலவே வேலைக்குப் போய்க் கொண்டு தானே இருக்கின்றேன்? அத்தோடு வீட்டு வேலைகளை யும் செய்கின்றேன் என்ற எண்ணம்கூட இல்லாமல் மாடாக உழைத்திருக்கின்றேனே"

"சீ... எதற்காக இந்தக் கத்தல் கத்தினேன்? பாவம்... அவரது மனதை அநாவசியமாக நோக வைத்து விட்டேன்." ஆகிய இரண்டு கூற்றுகளுமே இச்சிறுகதை யில் வரும் சந்திராவினுடையது. பெண்ணியம், பெண் சுதந்திரம் கண்மூடித்தனமாகப் பெண்களால் ஏற்கப்பட்டு

கணவன் பேசும் நியாயமான பேச்சுகள்கூட கண்மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன. அதையே இச்சிறுகதையில் வரும் சந்திரா என்னும் பாத்திரம் செய்கின்றாள். இவளுடைய கல்வி, தொழில், பெண் சுதந்திரத்திற்கு வழிகாட்டும் தன் கணவனையே சிறிய மன வருத்தத்திற்காக திட்டித்திமிறி வைதுவிடுகின்றாள். பின் தெளிவும் பெறுகின்றாள்.

பொதுவாக பெண்கள் ஆண்களை எதிர்த்துப் போராடுவதும், அவர்களின் வன்முறைகளைக் கடிந்து ஆவேசப்படுவதும், புரட்சிகரமான மனநிலையில் இருப்பதையும் பெரும்பாலான படைப்பிலக்கியங்கள் சொல்லிச் சென்றிருக்கின்றன. ஆனால் இச்சிறுகதையில் பெண்ணியம் என்ற போர்வையில் நியாயமற்ற விடயத்திற்கு குரல் கொடுக்கும் சந்திரா போன்ற பல பெண்கள் மீதான விமர்சனத்தை இச்சிறுகதை படைப்பாளி இந்தச் சிறுகதை ஒன்றின் மூலமே சொல்லி விடுகின்றார்.

"அவன்…அவள்…அது" என்னும் சிறுகதையில் அருண் - விமலா ஆகிய இரு தம்பதிகளுக்கும் இடையில் வாழ்வின் புரிதல் இன்றி ஏற்படும் சண்டைகளும் இவர்கள் இருவருக்கும் ஒரு மகன் இருந்தபோதும் பெயரளவில் கணவன் - மனைவி என்ற அந்தஸ்தில் வாழுவதையும் அருணின் வாழ்வில் திவ்யா என்ற பெண் குறுக்கிடுவதையும் பின்னர் பிள்ளைப்பாசம் தடுக்கவே திவ்யாவை விட்டு விமலாவிடமே ஓட அருண் நினைப்பதையும் யதார்த்தமாக சித்திரித்துக்காட்டியுள்ளார் இச்சிறுகதையாசிரியர். பொதுவாகவே திருமண வாழ்வில் கணவன் - மனைவிக்குள் விரிசல் ஏற்பட்டுவிட்டால் இன்னும் ஒரு துணையை நாடுவதை நாம் யதார்த்த வாழ்வில் அவதானித்திருக்கின்றோம். அதுவே இந்தச் சிறுகதையிலும் நடக்கின்றது.

அருணும் திவ்யாவும் தனி அறையில் இன்பம் துய்க்க எண்ணிய தருணத்தில் அலைபேசி அலறல் ஒன்று வருகின்றது. "என்னங்க…நம்ம வினோத் கிணற்றில் தவறி விழுந்திட்டான்… அவசர சிகிச்சைப் பிரிவிலை வச்சிருக்கிறன்…"

என்று மனைவி விமலா அழ பதிலுக்கு "கடவுளே… வினோத் எப்படி இருக்கிறான்?… நான் உடனே புறப்பட்டு வாறன்…" என்று அருண் புறப்பட திவ்யா அவன் போவதை வியப்போடு பார்க்கின்றாள் என்று இச்சிறுகதை முடிகின்றது. இந்த இடத்தில் சிறுகதை ஆசிரியர் வாசகர்களுக்கு சொல்லாமல் சில விடயங்களைச் சொல்லி விடுகின்றார். எவ்வளவு தான் கணவன் - மனைவி பிளவு இந்தச் சமூக வாழ்வில் பரந்து காணப்பட்டாலும் பிள்ளை என்ற ஒன்று அவர்களை ஈர்த்து வைத்திருக்கின்ற ஆயுதமாகவே இயங்கிக் கொண்டு இருக்கின்றது என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றார். இந்தச் சிறுகதையில் நடமாடும் பாத்திரங்கள் அனைத்தும் தமது தனி நியாயங்களை மிகைப்படுத்திக்கொண்டு வாழ்வதையும் திருமணம் என்ற பந்தம் நன்மை தீமை இரண்டிற்கும் வித்திட்டு ஒருவரை கட்டுக்குள் வைத்துக்கொண்டு பல தருணங்களில் நியாயமற்ற தண்டனைகளைத் தந்து விடுவதை விமலா போன்ற மனைவியை முன்னிறுத்தி கதாசிரியர் வெளிப்படுத்துகின்றார். அதுமட்டுமன்றி முறையற்ற விதத்தில் திவ்யா போன்ற பெண்கள் திருமணமான




ஆண்களிடம் அன்பை வெளிப்படுத்தினாலும் அது கானல் நீர் என்பதையும் சொல்லாமல் சொல்லிச் செல்கின்றார் ஆசிரியர்.

"கர்த்தர் மன்னிப்பாரா" என்னும் சிறுகதை பிரியா என்னும் பெண் சூழ்நிலை கைதியாகி விபச்சாரத்தில் ஈடுபட்டு வாழ்வு நடத்துவதையும் தன் பிழை உணர்ந்து திருந்தி வாழ முயற்சி செய்வதையும் வக்கிரம் கொண்ட ஆண் சமூகம் அவளை மீண்டும் விபச்சாரப் படுகுழியில் தள்ளிவிடுவதையும் வெளிப்படுத்துகின்றது. கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டு பின் தனக்கு நெருக்கமான ஆணுடன் மீண்டும் உறவில் ஈடுபட நினைக்கவே இதுவரை பொலிஸ் நிலையம் போகாத அவள் தன் விபச்சாரத் தொழிலுக்காக பொலிசாரிடம் அகப்படுகின்றாள். உண்மையில் இச்சிறுகதை பெண்கள் விபச்சார வாழ்வில் ஈடுபடுவதை எள்ளி நகையாடுவது போல படைத்திருப்பது கவலை அளிக்கின்றது. ஆணும் பெண்ணும் இணைந்து முறையற்ற விதத்தில் உறவுகொள்ளும்போது இந்தச் சமூகம் பெண்களை மட்டும் விபச்சாரி என்ற பதம் கொண்டு அழைப்பதும் வேதனைப்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளமுடியாதது. நிஜ வாழ்விலும் பிரியா போல பல பெண்கள் நடமாடிக்கொண்டு தான் இருக்கின்றனர். தவறு செய்யும் ஆண்கள் தப்பித்துக்கொள்கின்றனர்.

"அவள் ஓர் அநாதை" என்னும் சிறுகதை பெண் ஒருவர் இளமை முதல் முதுமை வரை அடையும் இன்னல்களைக் கோடிட்டுக்காட்டுகின்றது. சிறுவயது முதல் வறுமையில் உழன்று வீடு வீடாக வேலைச் செய்து, துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகி, கவனிப்பாரற்று, இறுதியில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து பணக்காரரிடம் தத்துக்கொடுத்து, அவன் வைத்தியராகி பணி செய்யும் இடத்திற்கு இந்தப் பெண்மணி முதுமையோடு தள்ளாடிச் சென்றும், அருவருப்புடன் நோக்கப்பட்டு, இறுதியில் கவனிப்பாரற்று இறப்ப தாக இச்சிறுகதை முடிவடைகின்றது.

"டாக்டரும் தாதியும் எழுந்து சென்று கிழவியைப் பார்த்தார்கள். கைநாடியைப் பிடித்துப் பார்த்த டாக்டர் உதட்டைப் பிதுக்கினார். பின்னர்

திரும்பி அறைக்கு வந்து, "நோயாளி இறந்துவிட்டார்." என்று துண்டில் எழுதிவிட்டு உறவினருக்கு அறிவிக்கும் படி தாதியிடம் கூறினார்." என்று சோகம் கலந்த நிலையுடன் இச்சிறுகதை முடிவடைகின்றது. உண்மையில் மனித வாழ்க்கை என்பது எதிர்பாராத திருப்பங்களைத் தர வல்லது. நம்மை பிழையான வழிக்கு இட்டுச் செல்லக் கூடியது. அதிலிருந்து விடுபட்டு நமது பாதையை நேரிய வழியில் கொண்டு செல்ல நமக்கு மன வலிமையே துணையாகின்றது. இச்சிறு கதையில் வரும் கிழவி என்னும் பாத்திரம் தனக்கு இளமை காலத்தில் யாருமற்ற நிலையில் தவறான முறை யில் ஆண்களோடு உறவுகொண்டு வஞ்சிக்கப்பட்டு இறந்து விடுகின்றாள். இவள் இவ்வாறான நிலைக்குத் தள்ளப்பட்டதிற்கு முதன்மை காரணம் இந்தச் சமூகமும் அவர்களது பிற்போக்கான மனநிலையும் தான். அதுமட்டுமன்றி இந்தக் கிழவி துணிச்சலாக வாழ முற்பட்டு ஆண்களிட மிருந்து விலகியிருந்திருந்தால் அவளுடைய அவப் பெயர் ஓரளவு குறைந்திருக்கும். இவ்விரண்டுமே இச்சிறுகதையில் நடைபெறவில்லை. ஒரு மனிதன் சிறந்து விளங்க அவன் மட்டுமன்றி இந்தச் சமூகத்தின் பங்கும் அதில் கணிசமானதாக இருக்கின்றது என்பதையே இச்சிறுகதை வெளிப்படுத்துகின்றது.



"பெண் மனம்" என்னும் சிறுகதை ஒரு விதவைப் பெண்ணின் உள்ளத்து உணர்வுகளை உணர்வு பூர்வமாக பதிவு செய்யும் சிறுகதையாகும். சாந்தி என்ற இளம் விதவையின் சோகக்கதையையும் குறுகிய காலத்திலேயே இறந்து போகப் போகும் கேசவனின் துன்ப நிலையையும் கேசவனின் வீட்டார் உண்மை யறியாமல் அவனை திருமணம் செய்யுமாறு தொந்தரவு புரிவதையும் வெளிப்படுத்தும் இச்சிறுகதை சற்று வித்தியாசமாகவே இருக்கின்றது. கேசவனுக்குத் திருமணம் நடந்தால் தான் அவனது தம்பி திருமணம் செய்வதாக கூறுவதால் பக்கத்து வீட்டு விதவை சாந்தியிடம் தனது உண்மை நிலையைக் கூறி திருமணம் செய்து கொள்ள முடியுமா என்று கேசவன் கேட்கின் றான். அதற்கு சாந்தி "...ஏற்கனவே நான் தாலியறுத்த வள். இரண்டாவது முறையும்... என்னாலை நினைச்சே பாக்க முடியேல்லை...." என்று கூறுவது யதார்த்தமான பேச்சாக வெளிப்படுகின்றது. பெண் களின் மனம் பெண்களுக்கே புரியும் என்பது போலவே சாந்தி தனது நியாயங்களைக் கூறும்போது, கேசவன் அமைதி காத்திருப்பதாக இச்சிறுகதை முடிவடை கின்றது.

இச்சிறுகதைத் தொகுதியில் வரும் "இங்கேயும் சில மனிதர்கள்" என்னும் சிறுகதை கணவன் - மனைவியாகிய நடேசன் - விஜயா தம்பதியினரின் இல்லற வாழ்க்கையையும் வெள்ளைக்கார துரையிடம் வேலை புரியும் விஜயன் என்ற சாரதி ஒருவனின் தன்னலமற்ற உதவியையும் மனித நேயத்துடன் வெளிப்படுத்துகின்றது. பிரசவ வேதனையில் துடிக்கும் விஜயாவை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு வாகனங்கள் எதுவும் கிடைக்காதபோது வெள்ளைக்கார துரையினுடைய வாகனத்தின் கொண்டு போக உதவி கேட்டும் அவர் மறுக்கவே, அதனை எதிர்த்து அந்தச் சாரதி வாகனத்தை வைத்தியசாலையில் நிறுத்தி விஜயா விற்கு உதவிசெய்கின்றான். சிறுகதையின் இறுதியில் "கடந்த வருடம் இதே போன்ற மாரியில் தாமதித்து வைத்தியசாலைக்குச் செல்ல நேரிட்டதால் தாயும் சேயு மாக இறந்துவிட்ட தன் மனைவியையும் குழந்தையையும் இந்தக் கணத்தில் நினைத்தபோது விஜயனுக்கு நெஞ்சடைத்தது."

இச்சிறுகதை மனித மனங்களின் எண்ண ஓட்டங்களுக்கு ஏற்ப மிகவும் அமைதியாக நடந்து பின்னர் விஜயாவின் பிரசவ வேதனையில் வேகம் கண்டு மீண்டும் அமைதி கண்டாலும் வெள்ளக்கார துரையின் இரக்கமற்ற பேய் குணத்தை தெளிவாக எடுத்துக்காட்டி, அதிகார வர்க்கம் புரியும் அடிமைத்தனங்களை இச்சிறுகதை விமர்சனமாக முன்வைத்திருக்கின்றது.

ச. முருகானந்தன் படைத்த பல சிறுகதைகளிலும் பாத்திரங்களின் உரையாடல் அவர்களது குணப்பண்பு கள் வெவ்வேறு சூழ்நிலைகளில் உழன்று வாழ்வை சீரழித்தவர்களையும், நன்றாக வாழ முயற்சி செய்தவர் களையும், தமது பிழைகளை உணர்ந்தவர்களையும் சித்திரித்துக்காட்டுகின்றது.

பொதுவாகவே புனை கதைகள் தனிமனித வாழ்வு, அதனுள் சிக்கிக்கொண்டிருக்கும் பிரச்சினை களை அப்படியே வெளிப்படுத்தவல்லன. அதையே "இனி வானம் வசப்படும்" என்னும் சிறுகதையும் செய்திருக் கின்றது. இந்தச் சமூகத்தில் வாழும் மனிதர்களின் இயக்கங்களையும் இச்சிறுகதை யதார்த்தப்பூர்வமாக கூறி சமூகத்தின் மீதான விமர்சனங் களைக் கதைக் கருவிலும், பாத்திரங்களின் போக்கிலும் வெளிப்படுத்தியிருக் கின்றது.

எனவே இச்சிறுகதையை மையப்படுத்தி நோக்கும்போது ஈழத்து இலக்கியப் பணியில் ச. முருகானந்தனுக்கும் முக்கிய இடம் ஒன்று இருப்பதை அவரது சிறுகதைகளினூடாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

ஜெயபிரசாந்தி ஜெயபாலசேகரம்

# பெண்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் அவலங்களினூடே சமூக அவலத்தை எடுத்தியம்பும் "நாம் பிறந்த மண்" சிறுகதைத் தொகுப்பு

*போர் நெருக்கடிகள் நிறைந்த இடர்பாட்டுக் காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் சளைக்காது மருத்துவப் பணியாற்றியவரும் இன்றுவரை இலக்கிய உலகில் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பவருமான டாக்டர்.ச.முருகானந்தன் அவர்களின் ஆறாவது சிறுகதைத் தொகுதியான நாம் பிறந்த மண் அவரது எழுத்தாளுமையின் மற்றொரு பரிணாமத்தை எடுத்தியம்பி நிற்கின்றது. வழமையாகப் போராட்ட வாழ்வியலை மையப்படுத்தி வெளிவந்த இவரது படைப்புக்கயளிலிருந்து சற்று மாறுபட்டதாக பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்ட இத்தொகுப்பு அவரது சமுதாயம் சார்ந்த பரவலான பார்வைக்கோணத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.*



"பெண்கள் நாட்டின் கண்கள்", "பெண் இல்லா வீடு பேய் வீடு" எனப் பலவிதமாக பெண்களின் அத்தியாவசியம் உரைக்கப்பட்டாலும் நமது சமுதாயக் கட்டமைப்பில் ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒவ் வொரு விதமான பிரச்சினைகள் எழும்போது அதனால் முதலில் பாதிக்கப்படுவது பெண்களே. அதாவது யுத்த நெருக்கடிகள், பொருளாதாரப் பிரச்சினைகள், சாதி ஏற்றத்தாழ்வுகள், இயற்கை அனர்த் தங்கள், உலக மயமாதல், கலாசார சீர்கேடுகள் முதலான அனைத்துப் பிரச்சினைகளாலும் அதிகம் பாதிக் கப்படுவது பெண்களே எனலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் பெண்களின் வாழ்வியலில் ஏற்படும் அவலங்களை இத்தொகுப்பிலுள்ள ஒவ்வொரு சிறுகதைகளிலும் அவதானிக்க முடிகின்றது.

இத்தொகுப்பில் அடங்கி யுள்ள சிறுகதைகளின் பேசுபொருள் குறித்து "இந்தத் தொகுதியிலுள்ள கதைகளில் நாம் பிறந்த மண், சிதைவுகள், நான் சாகமாட்டேன் ஆகிய கதைகள் மட்டுமே யுத்த அவலங்கள் பற்றிப் பேசுகின்றன. இனி எல்லாம் சுகமே, சின்னச் சின்ன தூறல், இவள், உறவுகள் என்பன குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல் களை அணுகியுள்ளன. அஸ்தமனத் தில் ஓர் உதயம், உறவுகள் என்பன ஆழிப்பேரலை அவலப் பின்னணியில் எழுதப்பட்டுள்ளன. நீலம் என்பது நிறமல்ல, மரண ஓசை என்பன பாலியல் பிறழ்வுகளினால் ஏற்படும்

அவலங்களைக் கூறுகின்றன. இதோ எந்தன் காதலி, இன்னொரு தேவதாஸ் ஆகியன காதலுடன் தொடர்புடைய கதைகள். பூவைக்குள் பூகம்பம் பாலியல் விவகாரங்களை அலசும் கதை, அஸ்தமனத்தில் ஓர் உதயமும் விதவா திருமணத்தை ஆதரிக்கும் கதை. ஏழையின் சிரிப்பில் முதியோர் அவலத்தையும் மனிதாபிமானத்தையும் பேசுகின்ற கதை. அன்னை தாய்ப்பாசத்தையும் யுத்த அவலங்களையும் தொட்டு நிற்கின்றது. வீடு சிறுகதை மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாழ்வு அவலத்தைக் கூறுகிறது" என ஆசிரியரே தனதுரையில் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இப்பேசுபொருள்கள் குறிக்கும் பிரச்சினைகள் ஒவ்வொன்றிலும் ஏதோ ஒரு வகையில் பெண்கள் தொடர்புபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அந்தவகையில்,


1. யுத்த அவலங்களினூடே பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்
2. குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்களால் அவதியுறும் பெண்கள்
3. பாலியல் பிறழ்வுகளால் பாதிப்புறும் பெண்கள்
4. மலையகப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

என்கின்ற தலைப்புகளில் இக்கதைகளினூடே பிரதானப்படுத்தப்படும் பெண்களின் வாழ்வியல்சார் அவலங்களை இங்கு நோக்கலாம்.

### 01. யுத்த அவலங்களினூடே வெளித்தெரியும் பெண்களின் பிரச்சினைகள்

போர் மேகங்கள் சூழ்ந்திருந்த யுத்த நெருக்கடிக் காலத்தில் பெருஞ்செல்வந்தர்களே அன்றாட உணவிற்குத் திண்டாடிய வேளையில் ஆண்துணை யற்றுத் தவித்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் அவலத்திற்கு சாட்சியாய் அமைகின்றது "நாம் பிறந்த மண்" என்ற முதலாவது சிறுகதை. இத்தகைய ஒட்டு மொத்தப் பெண்களின் துயரிற்கும் பதச்சோறாக தேவகி யின் அவல வாழ்வு இங்கு சித்திரிக்கப்படுகின்றது. அநியாய யுத்தம் கணவனின் உயிரைச் சூறையாடிக் கொள்ள கைக்குழந்தையுடன் நிர்க்கதியாய் தவிக்கும் இளம் விதவையான தேவகியின் அவலங்களைத் தனது எழுத்தினூடே படம் பிடித்துள்ள பாங்கு சிறப்பான தாகும். குறிப்பாக "ஒரு இளம் விதவையாக இருந்து கொண்டு மனக்கட்டுப்பாட்டுடன் வாழ்கின்ற சிரமம் ஒரு புறமிருக்க தனிமரமான அவளது இளமையில் குளிர்காய நினைக்கும் பெருச்சாளிகள் மறுபுறம் தொல்லையாய் இருந்தன. அவளுக்கு அழைப்பு விடுத்துக் காத்திருப்பதில் கடைக்காரக் குமாரும் ஒருவன். பெண்ணை வெறும் போகப்பொருளாக நினைக்கின்ற இச்சமூகம் அவளை மானுடநேயத்துடன் பார்க்காமல் இருப்பதில் வியப்பில்லை" என்கின்ற ஆசிரியரின் வரிகளே இத்தகைய பெண்கள் எதிர் நோக்கும் ஒட்டுமொத்தத் துயரிற்கும் சான்றாகின்றன.

இவை தவிர நாட்டு மக்களின் விடியலிற்காய் தம்மை அர்ப்பணித்த போராளிப் பெண்கள் படும் அவலங்களையும் இக்கதை பதிவு செய்யத் தவற வில்லை. வயிற்றுக்கு நல்ல உணவின்றி காடு




மேடெங்கும் அலைகின்ற இவர்களுக்கு வாய்க்கு ருசியான உணவளிப்பதற்காய் போராடும் தேவகியும் ஒரு வகையில் போராளியே என்பது இங்கு நிரூபணமா கின்றது.

இவ்வாறே "சிதைவுகள்" என்ற கதையில் எமது நாட்டில் முழத்திற்கு முழம் முளைத்திருந்த சோதனைச் சாவடிகளினால் பெண்கள் எதிர்நோக்கிய அவலங்கள் பேசப்படுகின்றன. குடும்ப வறுமையை விரட்டுவதற்கு கல்வியே தங்கள் மூலதனம் என்பதைக் கண்டுணர்ந்து அதற்காகப் பாடுபட்ட கீதா அதன் பலனை அனுபவிக்க முன்னரே அடையாள அட்டையைக் காரணம் காட்டி ஆளே அடையாளம் இல்லாமல் ஆக்கப்பட்ட அவலம் ஈழமண்ணில் நிகழ்ந்த பல உண்மைச் சம்பவங்களின் பிரதிபலிப்பாகின்றது. "சோதனைச் சாவடியில் ஒரு அரும்பு மீசை "ஐ சி" கேட்டது. அடையாள அட்டையை அவசரத்தில் விட்டு விட்டு வந்தது கீதாவுக்கு நினைவு வந்தது. அவன் அவளை முகாமுக்கு அழைத்துச் சென்றான். இன்று வரை அவள் திரும்பவேயில்லை" என்ற இக் கதையின் முடிவு இதற்குமேல் வேறெந்த வார்த்தை களையும் வாசகர்களுக்கு அவசியப்படுத்த வில்லை.

இவற்றுடன் பின்நவீனத்துவப் பாங்கிலும் நனவோடை உத்தியுடனும் எழுதப்பட்டுள்ள "நான் சாக மாட்டேன்" என்ற சிறுகதை போர்காலத்தில் அச்சுறுத்தப் பட்டு, கடத்தப்பட்டு, கொலை செய்யப்படும் எழுத்தாளனி னூடாக ஒட்டுமொத்த இனவுணர்வு எழுத்தாளர்களும் அக்காலத்தில் அனுபவித்த அச்சுறுத்தல்களை வெளிப் படுத்தியிருக்கும் அதே நேரம் பாசமான கணவனை இழந் திடக் கூடாது என்கின்ற பெண்ணின் மன ஏக்கங்களை "இனிமேல் நான் எழுதயில்ல எண்டு மனைவியின் கையில் அடித்துச் சத்தியம் செய்தேன். இரண்டொரு நாட்கள் எழுத்தாளர் சந்திரபோஸ் சுதாகரின் படு கொலைச் சேதி என்னையும் கலக்கிவிட்டுது. என்னைவிட மனிசி இன்னொருபடி கூடுதலாகக் கலங்கி நொடிந்து போனா. ஒரு நடைப்பிணம் போல அவ இருப்பதைப் பார்க்க மனதுக்கு என்னவோ போலிருந்தது" என்கின்ற வரிகள் எடுத்தியம்பி நிற்கின்றன.

### 02. குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்களால் அவதியுறும் பெண்கள்

அன்று தொடக்கம் இன்று வரை குடும்ப

உறவுகளிடையே சிக்கல்கள் இல்லாமல் இல்லை என்றே கூறவேண்டும். ஆயினும் இத்தகைய சிக்கல்களின் போதும் பலவகையிலும் பாரதூரமாகவும் பாதிப்பிற்குள்ளாவது பெண்களே எனலாம். இத்தகைய சிக்கல்களினால் அவதியுறும் பெண்களையும் இவர் தமது கதைகளில் பதிவு செய்யத் தவறவில்லை. சான்றாக "இனி எல்லாம் சுகமே" என்ற கதையில் பெண்ணின் இலட்சியக் கனவிற்காய் என்னதான் ஆண் விட்டுக்கொடுத்தாலும் சபலப்பட்டுப் போகின்ற அவனது மனதைக் காண்பித்து இறுதியில் தவறேதும் நிகழவில்லை எனக்காட்டினாலும் சமூக யதார்த்தத்தில் இவ்வாறான சபலப்புத்தியால் எத்தனையோ பெண் களின் வாழ்க்கை கேள்விக்குள்ளாகியுள்ளமையை நாம் மறுக்க முடியாது.

கணவன் மனைவிக்கு இடையேயான புரிந்துணர்வற்ற தன்மையால் விட்டுக்கொடுப்புகள் அற்று விரக்தியுடன் வாழும் வாழ்விலும் அதிகம் மனஉளைச்சலுக்கு உள்ளாவது பெண்களே என்பதை "சின்ன சின்ன தூறல்" சிறுகதை விபரிக்கின்றது. அண்ணன் தங்கை என்கின்ற பிரிக்க இயலா பந்தம் தனித்தனிக் குடும்பங்கள் ஆகின்ற போது ஏற்படுகின்ற உறவுச் சிக்கல்களை ஆழிப்பேரலை அனர்த்தத்துடன் தொடர்புறுத்தி அழகுறச் சித்திரிக்கும் "உறவுகள்" சிறுகதையில் எதிர்பாராத அனர்த்தம் வந்து நன்றாக வாழ்ந்தவர் தாழ்கின்ற நிலையிலும் அதிகம் பாதிப்புறு வது பெண்களே என்பதை உணர முடிகின்றது. எவ்வாறெனில் நல்ல வசதியாக வாழ்ந்த நளினி குடும்பம் சுனாமி அனர்த்தத்தால் நிர்க்கதியாகி தந்தை யின் சகோதரி வீட்டில் தஞ்சமாகிய வேளை என்னதான் உறவாக இருந்தாலும் அவர்கள் தமது ஒவ்வொரு தேவைக்கும் இன்னொருத்தரை சார்ந்திருக்கும் போது உடலும் உள்ளமும் கூசியே போவார்கள். இதிலும் பெண்களின் நிலைதான் கவலைக்கிடமாகும். சான்றாக கதையின் இறுதியில் நளினி தனது அத்தியாவசிய தேவைகளை தனது மைத்துனனிடம் தயங்கித் தயங்கி ஒப்புவிக்கின்ற சம்பவம் இங்கு காதலுணர்வுடன் படைக்கப்பட்டிருந்தாலும் இன்று ஆண்களுக்கு சமமாக தங்களின் சொந்தக் காலில் நிற்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் எதிர்பாராமல் ஏற்படும் இத்தகைய சந்தர்ப்பம் துன்பமயமானது என்பதையும் இப்பகுதி நினைவூட்டிச்செல்கின்றது.



இவ்வாறே காதலித்துக் கரம் பிடித்த கணவனுக்கு கல்யாண நாள் பரிசாக குழந்தை உரு வானதை அறிவிக்கும் "இவள்" என்ற சிறுகதை அவ்வாறு ஒரு குழந்தையைக் கணவனுக்குப் பரிசளிக்க இயலாத பெண்களின் துயரையும் நினைவுபடுத்தத் தவறவில்லை.

### 03. பாலியல் பிறழ்வுகளால் பாதிப்புறும் பெண்கள்

இன்றைய குடும்பங்களை அதிகம் பாதிக்கும் ஒரு விடயமாக பாலியல் பிறழ்வு என்பது விளங்கு கின்றது. பலரும் பேசத்தயங்கும் இத்தகைய விடயங்களை ஆசிரியர் ஒரு வைத்தியர் என்ற காரணத்தினாலோ என்னவோ மிகவும் நிதானமாக இக்கதைகளில் பேசிச்செல்கிறார் என்றே கூறலாம். குறிப்பாக "நீலம் என்பது நிறமல்ல" என்ற கதையை எடுத்துக் கொண்டால் பொருளாதாரத்தில் இலாபம் ஈட்டுவதற் காக தந்தை விடும் தவறு அவரது மகளின் வாழ்வையே பாழாக்கி விடுகின்றது. நீலப்படங்களால் கேடுற்ற சமுதாயம் எத்தனையோ பெண்களின் வாழ்வை நாச மாக்கியமைக்கு இக்கதை சான்றாகின்றது. அத்துடன் கதையின் முடிவில் வரும் "நீலம் சிவப்பாகப் பெருகி என் வாழ்வு கறுப்பாக மாறி இருண்டு போனது" என்கின்ற வரிகள் ஆசிரியரின் கற்பனை வளத்திற்கும் கவிதா உணர்வுக்கும் கட்டியம் கூறி நிற்கின்றன.

முதிர்கன்னியாகி இயல்பான பாலியல் உந்துதல்களால் அவதியுற்று சபலப்படும் ஒட்டுமொத்த பெண்களின் மனக்குமுறல்களை எடுத்தியம்புவதாக "பூவைக்குள் பூகம்பம்" என்ற சிறுகதையும், சிலரது பாலி யல் பிறழ்வுகளால் பலரது வாழ்வு கேள்விக்குள்ளா வதை "எச்.ஐ.வி" தொற்றுடன் இணைத்து விளக்குவ தாக "மரண ஓசை" என்கின்ற சிறுகதையும் மிகப்பெரும் உண்மைகளைப் பேசுபொருளாகக் கொண்டு சிறப்புறு கின்றன.

### 04. மலையகப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

மலையகப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களை எடுத்தியம்புவனவாக பல்வேறுபட்ட படைப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. அந்த வகையில் ஆசிரியர் பல் வேறுபட்ட பொருண்மைகள் பேசும் தனது இத்தொகுப் பில் ஒரேயொரு கதையினூடாகவே அவர்கள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினையைப் பதிவு செய்துள்ளமை சிறப்பானதாகும். நாட்டின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் பங்கு வகிக்கும் மலையகப் பெண்கள் வீடற்றவர்களாக வாடும் அவலத்தையும் அதற்காக அவர்களிடம் கோரப்படும் பாலியல் லஞ்சத்தையும் "வீடு" என்ற சிறுகதை தெளிவாகப் படம் பிடித்து நிற்கின்றது.

"பஞ்சவர்ணம் துரைகிட்ட நல்லமாதிரி நடந்துக்க... அப்புறம் நானும்... வீடு கட்டாயம் கிடைக்கும்..." என்ற லசிந்தவின் வார்த்தைகள் முதலாளித்துவத்தின் குள்ளநரித்தனத்தை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது.

இவ்வாறு இத்தொகுப்பிலுள்ள இவரது கதைகள் அனைத்தும் பெண்களின் பிரச்சினைகளை மையப் படுத்தி அதனூடே பல்வேறு சமூக அவலங்களையும் இரத்தமும் சதையுமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

■ செல்வி சிந்துஜா திருச்செல்வம்

# "நாளை நமதே" கட்டுரைத்தொகுதி பற்றிய கண்ணோட்டம்




வைத்தியத் துறையில் மட்டுமல்லாது இலக்கியத் துறையிலும் தடம் பதித்த வைத்தியரும் எழுத்தாளருமான டாக்ரர் ச.முருகானந்தன் அவர்கள் கவிதை, சிறுகதை, நாவல் என பல துறைகளிலும் பேனா முனையால் சரித்திரம் படைத்து கட்டுரை என்னும் இலக்கியப் பகுதியினுள்ளும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். இவரது கட்டுரைகள் அறிவியல் உட்சாகக் கட்டுரைகளாகவே மிளிர்கின்றன. டாக்ரர் ச.முருகானந்தன் அவர்களின் படைப்பில் "நாளை நமதே" என்ற அறிவுசார் நம்பிக்கையூட்டும் கட்டுரைத் தொகுதியே முதலாவது கட்டுரைத் தொகுதியாக வெளிவந்துள்ளது. இவரது கட்டுரைகள் பல வெள்ளி நாதத்திலும், தினக்குரல், வீரகேசரி முதலான பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. இன்றைய மக்களிடத்தே வாசிக்கும் திறனானது மிக மிக அருகி வருகின்றது. இந்த நிலையில் இவரது இப்படைப்பானது மக்களிடம் வாசிக்கும் திறனை ஏற்படுத்தும் என்றே நம்பப்படுகின்றது.

டாக்ரர் ச.முருகானந்தன் அவர்களின் "நாளை நமதே" என்ற இன் நூலானது இன்றைய தலைமுறையினரை சிந்திக்க வைக்கும் ஓர் உந்து சக்தியாகவே காணப்படுகின்றது. இதன் மூலம் நாளைய தலைவர்களான இளைஞர்கள் சரியான திசையில் முன்னேற வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. இவரது "நாமே எமது வாழ்வை உருவாக்க வேண்டும்" என்ற கட்டுரையில் "நன்றும் தீதும் பறர் தரவல்ல உங்களைப் பற்றி நீங்கள் எண்ணுகிற எண்ணம் தான் உங்களை உருவாக்குகின்றது." என்று குறிப்பிடுகின்றார். உண்மையிலையே அற்புதமான கருத்துக்களாகவே காணப்படுகின்றது. இக்கட்டுரையைப் படிக்கும் போது எம்மையறியாமலேயே எமக்குள் ஓர் தன்னம்பிக்கை பிறக்கின்றது. இப் பகுதியில் மட்டுமல்லாது "உன்னை அறிந்தால் உலகத்தில் நீ வாழலாம்" என்ற கட்டுரையிலும் வாழ்வில் நம்பிக்கையூட்டும் பல கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன.


வெற்றியின் பாதைகள் கரடுமுரடானவை என்ற கட்டுரையில் வெற்றிப் பாதை என்பது கல்லும்முள்ளும் நிறைந்த காட்டுப்பாதை தான் மனத் தைரியத்தோடு காட்டை ஊடறுத்து கல்லிலும் முள்ளிலும் மழையிலும் வெய்யிலும் பசியிலும் தாகத்திலும் பயணம் செய்கின்ற ஒரு வீரப்போராளியின் மனநிலை தான் வெற்றியின் பயணம் என்று வெற்றிக்கான வழியை நிஜமாகவே கூறுகின்றார். இப்படியான அறிவு ததும்பும் இவரது கட்டுரைகளைப் படிக்கும் போது எம்முள்ளே உற்சாகம் என்பது தானாகவே பிறக்கின்றது. இவரது ஒவ்வோர் கட்டுரைகளும் பல அரிய கருத்துக்களையே கூறுகின்றது. ஒவ்வொரு வரிகளிலும் ஓர் மனிதன் சிறப்பாக வாழ்வதற்கான விதைகளே இவரது கட்டுரைகளில் விதைக்கப்பட்டுள்ளது.

சமூகத்திற்காகவே தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் டாக்ரர் ச.முருகானந்தம் அவர்களது இலக்கியப் பணியானது பிரமிக்கத்தக்கதாகும். மக்கள் மத்தியில் அருகி வரும் வாசிப்புத் திறனை வளர்ப்பதற்குக் கூட இவரது இலக்கியமானது பணிபுரிகின்றது. வாசிப்பினாலேயே ஒரு மனிதன் பூரணமடைகின்றான்.

சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை என இவரது இலக்கியப் பணியானது பரந்துபட்டுச் செல்கின்றது. எமது நாட்டிலே காணப்படுகின்ற வன்முறைகள், இனப்படுகொலைகள், யுத்த அவலங்கள், சாதி மதம், பண்பாடு, பாலியல் வன்முறைகள் முதலான பல கருத்துக்களையும் தனது படைப்பினூடே மக்களுக்கு மிகவும் எளிமையாக விளங்கக் கூடியவாறு படைத்துள்ளார். இதனால் சமூகமானது உயரிய நோக்குடன் செயற்பட வாய்ப்புகள் உண்டு. இவ்வாறு சமூகத்திற்கான இவரது இலக்கியப் பணியானது பலராலும் போற்றப்படுகின்றது.

இவர் தனது படைப்புக்களிற்கு மூலகர்த்தாவாக சமூகத்தையே சாடுகின்றார். இவர் தனது தன்னம்பிக்கையினால் இன்றும் சமூகத்தையும் நேசித்து மக்கள் தொண்டனாகவே இவர் செயற்படுகின்றார் என்பது இவரது படைப்புக்களிலும் செயற்பாடுகளிலும் இருந்து கற்றுக் கொண்டது. இவரது ஆக்கபூர்வமான படைப்புக்கள் மூலம் சிறந்த சமூக சேவகன் என்பது யாமறிந்த உண்மை. "நான் எழுத்தை நேசிப்பவன் சமூகத்தை நேசிப்பவன் எனது படைப்புகள் சமூக முன்னேற்றத்திற்கு சிறு துளியாவது பயன்பட்டிருந்தால் அது என் வெற்றியென்று" இவர் குறிப்பிடுவதன் மூலம் சமூகத்திற்கு ஆற்றிய இலக்கியப் பணியின் தன்மை தானாக விளங்கும் என்பதில் ஐயம் இல்லை. இவ்வாறு இலக்கியத் துறை மூலம் சமூகத்திற்காக பணிபுரியும் டாக்ரர் ச.முருகானந்தனம் அவர்கள் பலராலும் போற்றப்படுகின்றன சிறந்த உன்னதமான படைப்பாளியாவார்.


கதாசிரியர் ச.முருகானந்தம் அவர்களின் சமூக இலக்கியப் பணியானது பரந்துபட்ட உன்னதமான பணியாகும்.




# அவர்கள் துணிந்து விட்டார்கள் சிறுகதைத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் பற்றிய பார்வை

■ அஷ்வினி வையந்தி

சமுதாய நோக்கு, தேசியப் பிரச்சினைகள் என்பவற்றை மைய மாகக் கொண்டு சிறுகதைகள் எழுதிய மூத்த எழுத்தாளர்தான் ச.முருகானந்தன். இவர் பிரகலாத ஆனந்த, வன்னேரிஜயா, வன்னியன், தமிழ்ப்பித்தன், கந்த மகிழ்னன், கருணைமுருகு ஆகிய புனைபெயர்களில் சிறுகதைகள், குறுநாவல்கள், விமர்சனக் கட்டுரைகள் என்பவற்றை எழுதியுள்ளார். சாகித்திய மண்டல பரிசு, வட மாகாண விருது போன்ற பரிசுகளையும், விருதுகளையும் பெற்றுக் கொண்ட இவர் 25 இற்கும் மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்று பல்வேறு பரிசில்களை வென்றுள்ளார்.




ச.முருகானந்தன் யாழ்ப்பாணத்தில் பிறந்து, வளர்ந்திருந்தாலும் மலையக மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை மையமாகக் கொண்டு சிறுகதைகள் எழுதியுள்ளார். குறிப்பாக "அவர்கள் துணிந்துவிட்டார்கள்" என்ற தலைப்பில் அவர் எழுதிய சிறுகதைத்தொகுதி 2010 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதில் பதினான்கு சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிறுகதைகளும் மலையக மக்களின் வெவ்வேறுபட்ட பிரச்சினைகளை பேசுவதாக எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக மலையக மக்கள் எதிர்நோக்கிய சம்பளப் பிரச்சினை, உணவுப் பற்றாக்குறை, மேலதிகாரிகளின் அடக்குமுறை, மலையகப் பெண்கள் எதிர்நோக்கிய காதல், கல்யாணம் சார்ந்த பிரச்சினைகள் என்பவற்றை எடுத்துரைப்பதாக இவருடைய சிறுகதைகள் காணப்படுகின்றன.

ச.முருகானந்தன் எழுதிய "தேயிலைப் பெண்" என்ற சிறுகதை மலையகப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தேன்மொழி என்ற பாத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. மலையகப் பெண்களின் படிக்க வேண்டும் என்ற கனவு அவர்களின் வறுமைநிலையால் சீரழிந்து போவதையும், அவர்கள் அன்றாடம் உணவு இல்லாமல் துயரப் படுவதையும் இக்கதை எடுத்துரைக்கின்றது. இக்கதையில் ஆசிரியர் கர்ப்பிணியாக இருந்துகொண்டு உண்ண உணவில்லாமல், வேலைக்குப் போக வேண்டிய கட்டாயத்தில் வேலைக்குச் செல்லும் தேன்மொழி என்ற பாத்திரத்தின் வழியாக மலையகப் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கின்றார்.

"புரியாத புதிர்கள்" என்னும் சிறுகதை குடும்ப கஷ்டத்தின் காரணமாக கொழும்புக்கு வேலைக்குச் செல்லும் மலையகச் சிறுவர்களின் துயரநிலையை எடுத்துரைக்கின்றது. இக்கதையில் வருகின்ற சுந்தரி என்ற பெண் கொழும்பு நகரைப் பார்த்து வாயடைத்து நிற்பதும், கடவுள் ஏன் இப்படியான வேறுபாட்டை வைத்திருக்கிறார்? எனத் தங்களது மலையக வாழ்வையும், கொழும்பு நகர வாழ்வையும் ஒப்பிட்டு பார்ப்பதும் மலையக மக்களின் வறுமைநிலையை வெளிப்படுத்துவதாக உள்ளன. இறுதியில் கூண்டுக்கிளியை சுந்தரி திறந்துவிடுவதன் மூலம் அடிமைப்பட்ட



வாழ்க்கையிலிருந்து அவள் விலகி விட்டாள் என்பதை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். இக்கதையில் குறியீட்டுப் பாங்கினூடாக ஆசிரியர் தனது கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

இக்கதைகளைப் போலவே அவருடைய ஒவ்வொரு சிறுகதைகளும் மலையக மக்கள் எதிர் நோக்கிய பல்வேறுபட்ட பிரச்சினைகளை பேசுவதாக உள்ளன. “முன் வைத்த காலை” என்ற சிறுகதை தொழிற்சங்கத்தில் நடக்கின்ற பிரச்சினைகளையும், “கபடத்தனம்” என்ற சிறுகதை மேலதிகாரிகள் பணத் திற்கு விலை போதல் பற்றியும், “அவர்கள் துணிந்து விட்டார்கள்” என்ற சிறுகதை சாப்பாட்டுத் தட்டுப் பாட்டால் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களையும் எடுத்துரைக்கின்றது.

இவ்வாறு “அவர்கள் துணிந்து விட்டார்கள்” என்ற இந்நூலில் உள்ள ஏனைய சிறுகதைகளும் வெளி நாட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்லும் பணிப்பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் சவால் கள், மந்திரிமார்களின் அடக்குமுறை என மலையக மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை பேசுவதாக உள்ளன.

ச.முருகானந்தனின் கதைகள் பெரும்பாலன வற்றில் பெண்களின் பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன. குறிப்பாக சிறுவயது பெண்கள் எதிர்நோக்கும் கல்வி, வறுமை, உணவுப் பிரச்சினைகள் திருமண வயதை அடைந்த பெண்கள் எதிர்நோக்கும் காதல் பிரச் சினைகள் மற்றும் திருமணம் முடித்த பெண்கள் எதிர் நோக்கும் கணவனின் அடக்குமுறை, சமூகத்தில் இருந்து வெளிக்கிளம்பும் அடக்குமுறைகள் என்ப வற்றை எடுத்துரைப்பதாக உள்ளன.

எடுத்துக்காட்டாக “புரியாத புதிர்கள்” என்ற சிறுகதையில் வருகின்ற சுந்தரி என்ற சிறுபெண் கொழும்புக்கு வேலைக்குச் சென்று அங்கே அடக்கு முறைகள் பலவற்றை எதிர்கொள்வதையும், “தரை இறங்கும் விமானங்கள்” என்ற சிறுகதையில் வருகின்ற சரோ என்ற பெண் வெளிநாட்டில் அடக்குமுறைகளை எதிர்கொள்வதையும் குறிப்பிடலாம். குறிப்பாக “ஊரில வீட்டில் ஆண் சிங்கத்திற்குப் பதிலாக இங்கு பெண் சிங்கம்” எனக் குறிப்பிடுவது பெண்ணாக இருந்து கொண்டு இன்னொரு பெண்ணைத் தொல்லைப் படுத் தும் பாத்திரத்தின் குணவியல்பை எடுத்துரைக்கின்றது.

“ஆறிலிருந்து அறுபது வரை” என்ற சிறுகதை மலையகத்தில் பிறந்து வளர்ந்த முத்தையா என்னும் ஆணின் வாழ்க்கையை எடுத்துரைக்கின்றது. இக்கதை யின் வழியாக ஆசிரியர் மலையக முதியவர்களின் வாழ் நிலையை வெளிப்படுத்தியுள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

ஆசிரியர் தனது சிறுகதைகளில் பாத்திரச் சித்திரிப்பினை மிகவும் தத்ரூபமாக படைத்து மலையக மக்களின் வாழ்க்கை முறைகளை எடுத்துரைப்பதனைக் கண்டுகொள்ளலாம். எடுத்துக்காட்டாக சடகோபன், இலட்சுமணன், சுந்தரி, சித்திரா போன்ற பாத்திரங்களை மலையக மக்களுக்கு எதிராகக் குரல் எழுப்பும் வகையில் படைத்துள்ளதை குறிப்பிடலாம்.

மலையகத்தில் பணியாற்றியதன் மூலம் மலையக மக்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றை தனது சிறுகதைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ள இவரது படைப்பாற்றல் வியக்கதக்கதே. குறிப்பாக மலை யக மக்களின் பேச்சுமொழியை தனது சிறுகதைகளில் தத்ரூபமாக கொண்டு வந்து முடிந்தவரை அவர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தனது சிறுகதைகளில் கொண்டு வந்துள்ள இவரது எழுத்தின் ஆற்றலை பாராட்டித்தான் ஆக வேண்டும். மலையக மக்களின் பிரச்சினைகளை மாத்திரமின்றி வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், உள்நாட்டு யுத்தத்தினால் வடகிழக்கு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் என்பவற்றை எடுத்துரைப்பதாக இவரது சிறுகதைகள் காணப்படுகின்றன.

ச.முருகானந்தனின் “அவர்கள் துணிந்து விட்டார்கள்” என்ற சிறுகதைத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் யாவும் மலையக மக்களின் வாழ்வியலை பாத்திரப்படைப்பு, பாத்திர உரையாடல், பேச்சுமொழி போன்ற உத்திமுறைகளைக் கொண்டு சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ளமுடிகின்றது. எனவே ச.முருகானந்தனின் எழுத்தாற்றல் மூலம் மலையக மண்ணின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.




# ச. முருகானந்தனின் பணிகள்

விஜிதா

வன்னி மண்ணில் துடிப்பு மிக்க ஓர் இளைஞராக அரச மருத்துவசேவையில் பணியாற்ற வந்த டாக்டர் ச.முருகானந்தன் கிளிநொச்சி மக்களோடு ஐக்கியமாக அந்த மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளிளெல்லாம் பணியாற்றி அங்கிருந்தே ஓய்வு பெற்றவர். இம் மாவட்ட மண்ணில் ஆழக்கால் பதித்து மிகவும் நெருக்கடியான கால கட்டத்தில் நீண்ட 25 வருடங்கள் பணியாற்றிய இவர் தனது சிறந்த மருத்துவ பணியாலும், மனித நேய பணிகளாலும், நவீன கலை இலக்கிய பங்களிப்பாலும் மக்கள் மனம் கவர்ந்தவர். வன்னேரிக்குளத்தில் பணியாற்ற வந்த இவர் மாவட்டத்தின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் பணி யாற்றியபோதும் வன்னேரி ஐயா என்ற நாமத்தால் பரவலாக அறியப் பட்டவர். வன்னேரிக்குளம், அக்கராயன்குளம், பூநகரி, முழங் காவில், கிளிநொச்சி, வேராவில் முதலான வைத்தியசாலைகளிலும், ஆனைவிழுந்தான், ஜெயபுரம் தரிசிப்பு நிலையங்களிலும் பணி யாற்றி நெருக்கடியான கால கட்டத்தில், இங்கு மருத்துவர்கள் வந்து பணியாற்ற பின்னடித்த காலம் என்பது மனம் கொள்ளத்தக்கது.

இவரது பணிகளை மருத்துவ பணி, பொதுப்பணி, இலக்கியப்பணி என்ற மகுடங்களில் நோக்கலாம்.

### மருத்துவப் பணி

இடர் நிறைந்த போரின் ஆரம்பக் காலகட்டத்தில் நிரந்தர வைத்தியர் ஒருவர் நீண்டகாலமாக இல்லாத வன்னேரிக்குளத்திற்கு மருத்துவராக வந்த இவர் ஏழை விவசாய மக்களின் நோய் தீர்க்கும் மகத்தான பணியை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். விரைவிலேயே அந்த மக்களின் மனம்கவர்ந்த மருத்துவராகிவிட்ட வைத்திய கலாநிதி முருகானந்தன் இந்த பிரதேச மக்களில் ஒருவராகவே மாறி பணியாற்றினார். வடமராட்சியில் வசதியான ஒரு குடும்பத்தில் பிறந்த இவர் மிகவும் வசதிபடைத்த குடும்பத்தில் பிறந்த சந்திரகாந்தாவை மணம் முடித்து இந்த கிராம பாடசாலைக்கு ஆசிரியையாக பணியாற்ற அழைத்து வந்தார். குடும்பமாக வாழ விடுதி இல்லாத போது வசதி குறைந்த தனியார் வீடொன்றில் வாழ்ந்து பணியாற்றினார்.

போர் உக்கிரமடைய ஆரம்பித்த பின்னர் இடப்பெயர்வுகள், மருத்துவர்களுக்கான பற்றாக்குறை என்பவற்றால் மாவட்டத்தின் பல்வேறு வைத்தியசாலைகளுக்கும் இவரது பணி விரிவு பெற்றது. யாழ்ப்பாணத்தி லிருந்து பல இலட்சம் மக்கள் இடப்பெயர்ந்து வன்னிக்கு வந்த கால கட்டத்தில் அல்லும் பகலும் இவர் ஆற்றிய சேவை அளப்பரியது. நுளம்புக் கடிக்கும், பாம்புக்கடிக்கும் இடையே வாழ்ந்த மக்களை மலேரியா, கொடூரமாக தாக்கிய கால கட்டத்தில் இவரது வைத்தியப்பணி பலருக்கும் பயனளித்தது.

### மனித நேயப் பணி

இவரது மனிதநேயப் பணி செஞ்சிலுவைச் சங்கம், வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக தலைவர், கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிறுவன செயலாளர், யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் முதியோர் இல்ல செயலாளர், கிளிநொச்சி தமிழ்ச் சங்க தலைவர் என பல தளங்களில் விரிவு பெற்றது. இடப்பெயர்ந்து வந்தவர்களுக்கான நிவாரண உதவிகள், புனர்வாழ்வு உதவிகள், வைத்திய சேவை என பல பொதுப் பணிகளில் ஈடுபட்டார். அமரர் முதியோர் காவலர் கந்தசாமி ஐயாவை தலைவராக கொண்டியங்கிய யோகர் சுவாமிகள் திருவடி நிலையம், அனாதர வாக கைவிடப்பட்ட முதியவர்களுக்காக கிளிநொச்சி மாவட்டத்தின் முதியோர் இல்லத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்த போது அதன் செயலாளராக இருந்து பணியாற்றினார். இவ்

இல்லத்தை நடாத்துவதற்காக மனிதநேய நம்பிக்கை நிதியம், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பரோபாரிகளின் உதவிகளைப் பெற்று, 87 முதியவர்களை இவ் இல்லம் பராமரித்தது. மேலும் கிளிநொச்சியிலிருந்து முழங்காவிலுக்கு இடம்பெயர்ந்த சைவச்சிறுவர் இல்லத்திலும் இவரது பணிகள் தொடர்ந்தன.

**கலை இலக்கிய பணி**

ஒரு சிறுகதை எழுத்தாளனாக இலக்கிய உலகில் கால் பதித்த இவர் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடமாணவனாக இருந்தபோதே சென்னை இலக்கிய சிந்தனைப் பரிசைபெற்றமை குறிப்பிடத்தக்கது. வன்னி மண்ணில் கால்பதித்து போருக்குள் வாழ்ந்த காலம் இவரது எழுத்தைப் புடம் போட்டது. வன்னி மண் வாசனையுடன் இவர் எழுதிய போர்க்கால கதைகள் இவரை ஒரு சிறந்த எழுத்தாளனாக வளர்த்தது. வன்னியில் பணியாற்றிய போது இவர் எழுதிய "தரைமீன்கள்" சிறுகதைத் தொகுதி இலங்கை அரசின் சாகித்திய மண்டல பரிசினைப் பெற்றது.


சிறுகதை எழுத்தாளனாக ஆரம்பித்த இவர் கவிதை, நாவல், விமர்சனம், சினிமா, கட்டுரைகள், மருத்துவம் என பல்துறைகளில் எழுதிக்குவித்தார். கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய பணிமனையால் மாதாந்தம் வெளியிடப்பட்ட "விழி" என்ற மருத்துவ சஞ்சிகையில் மருத்துவ விழிப்புணர்வு கட்டுரைகளை எழுத ஆரம்பித்த இவர் இன்று ஈழத்தின் முக்கிய பத்திரிகைகளிலும், சுகவாழ்வு சஞ்சிகையிலும் தொடர்ச்சியாக மருத்துவ விழிப்புணர்வு கட்டுரைகளை எழுதி வருகின்றார். அத்துடன் தொலைக்காட்சிகளில் மருத்துவ கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகின்றார் நாடளாவிய ரீதியில் மது, எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளில் உரையாற்றி வருகின்றார்.

இதுவரை 250 சிறுகதைகளை எழுதியுள்ள இவர் பத்து சிறுகதைத் தொகுதிகளை வெளிக்கொணர்ந்துள்ளார். மேலும் இரு நாவல்கள், இரு கவிதைத் தொகுதிகள், 2 அறிவியல் உற்சாக கட்டுரைகள், நான்கு மருத்துவ நூல்கள் என 20 நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். இவர் எழுதிய "எயிட்ஸ் இல்லாத உலகம்" என்ற நூலுக்கு வடக்கு கிழக்கு மாகாண விருது கிடைத்தது. தகவம் விருது, கனகசெந்திநாதன்கத்தா விருது, உள்ளிட்ட 35 பரிசில்களை பெற்றள்ளார்.

இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருது. "கலாபூசணம்" விருது, தமிழ்ச் சங்கத்தின் இலக்கியச் செல்வர் விருது, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கலைஞானலாநிதி விருது, கிளிநொச்சி கலை பண்பாட்டு கழகத்தின் வாழ்நாள் சாதனைக்கான உயர் கரை எழில் விருது உள்ளிட்ட விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இறுதியாக பூநகரி முழங்காவில் பொறுப்பு வைத்திய அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் தற்போது கொழும்பு நியூ செஞ்சரி லயன்ஸ் கழக தலைவராக இருந்து மருத்துவ மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இலக்கியத்திற்கான வாழ்நாள் சாதனை விருதை இலங்கை அரசிடமிருந்து (கல்வி அமைச்சு) பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.




ஈழத்திக் பிரபல எழுத்தாளரும், முற்போக்குச் சிந்தனை கொண்ட படைப்பாளியுமான, டாக்டர் ச.முருகானந்தன் தேசியப்பத்திரிகைகளில் மருத்துவம் சார்ந்த கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கொடிய யுத்த சூழ்நிலையில் வன்னிப் பிரதேசத்தில் கால்நூற்றாண்டு காலமாக மருத்துவராக அரும் பணியாற்றிக் கொண்டே மக்கள் உடல் நலனில் அக்கறை செலுத்தி வந்ததுடன், அவர்களுடைய அவலங்களையும் உணர்வு களையும் நேரடியாகக் கற்று தேர்ந்து, அவர்களைத் தனது அக்க இலக்கிய படைப்புகளில் கருப்பொருளாகவும் கொண்டு பல படைப்புகளை உருவாக்கியவர் டாக்டர் ச. முருகானந்தன்.


சிறந்த சிறுகதை எழுத்தாளராக இனங்காணப்பட்ட இவர் நாவல், கவிதை, விமர்சனம், கட்டுரை ஆகிய துறை களிலும் கால் பதித்துள்ளார். இது இவரது முதலாவது மருத்துவ நூலாகும். எனினும் இது சாதாரண வாசகனை மனதில் கொண்டே எழுதப்பட்டுள்ளது.

இன்று உலகில் வருந்தோறும் மில்லியன் கணக் கான இளம் உயிர்களைக் காவுகொண்டு வரும் அதிபயங்கர மான எயிட்ஸ் பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசயம்.

எயிட்ஸ் பற்றிய அடிப்படை அறிவையும் விழிப் புணர்வையும் இந்நூல் ஏற்படுத்தும் என்பதில் சந்தேக மில்லை.

- வைத்தியகலாநிதி கே.சிவபாதசுந்தரம்

■ தாமரைச் செல்வி



# வன்னி மண்ணின் வாழ்வைச் சொல்லும் வலிமை மிக்க படைப்பாளி

ச.முருகானந்தன் என்ற படைப்பாளி பற்றிப் பேசும் போது அவருடைய சமூக நேசிப்பின் தன்மை பற்றியும் பேச வேண்டிய தேவை ஏற்படுகிறது. போர் சூழ்ந்திருந்த வன்னிப் பிரதேசத்தில் அதுவும் பின் தங்கிய ஒரு காட்டுக் கிராமத்தில் மருத்துவராகக் கால் நூற்றாண்டு காலம் பணிபுரிவதென்பது சாதாரண விடயமல்ல. ஒரு மருத்துவர் என்ற ரீதியில் இவர் அன்றாடம் சந்திக்கும் மக்கள் மிக ஏழ்மையானவர்கள். வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கும் மனிதர்கள். இந்த மக்களுக்கான பணியை எத்தனையோ இன்னல் களுக்கு மத்தியில் மிகுந்த அர்ப்பணிப்போடு செய்து வருபவர் இவர். இந்தப் பணிதான் இலக்கியம் எழுதும் இவரது பேனாவுக்கு மையாக ஊற்றெடுத்திருக்கிறது. இந்த மனிதர்களுடைய பிரச்சினைகள் இவருக்குள் இருக்கும் மனித நேயத்தை அசைக்கும் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு படைப்பு இவரிடமிருந்து பிறந்திருக்கிறது.

இவர் தனது "தரை மீன்கள்" சிறுகதைத் தொகுதியில் குறிப்பிடுகிறார்; "ஒரு கதாசிரியனுக்குச் சமுதாயப் பொறுப்புக்களும், அழகியல் உணர்வை மேம்படுத்தும் கடமைகளும் உண்டு. தான் வாழ்கின்ற சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் போலித் தனங்களையும், பிற்போக்குச் சிந்தனைகளையும் முறியடித்துச் சமூக அபிவிருத்தியில் சரியான பாதையை ஏற்படுத்தி மானிட வாழ்வை நெறிப்படுத்திட முடியும் என்ற நம்பிக்கையுடன் கலை இலக்கியவாதிகள் பேனா ஏந்திட வேண்டும் என்று உணர்ந்து, எனது படைப்பு களில் ஜனரஞ்சகமாகச் சமூக சீர்திருத்த முயற்சிகளை முன்வைத்துள்ளேன்."

இவரது இந்த வார்த்தைகள் படைப்பாக்க முயற்சியில் இவருக்குள்ள தெளிவையே பிரதிபலிக் கிறது. ஒரு படைப்பாளியின் நோக்கு எத்தகையது என்பதை அறியுமிடத்து அவனது படைப்புகளின் தன்மையைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

கடந்த பல வருடங்களாகப் போரின் நெருக்கடிக் குள் சிக்கியிருந்த ஒரு பிரதேசத்தில் மருத்துவராகவும், படைப்பாளியாகவும் இரண்டு துறைகளிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தி வருபவர் இவர். வட மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ச.முருகானந் தன். இருந்தும் இவரது எழுத்துத் துறைக்கு அதிக களம் அமைத்துக் கொடுத்தது வன்னி மண்தான். வன்னி மக்களின் யதார்த்தமான வாழ்வு பற்றியே இவரது அநேகமான கதைகள் பேசியிருக்கின்றன. மூச்சு விட நேரமில்லாத மருத்துவப் பணியின் மத்தியிலும் தனது எழுத்துப் பணியை ஒரு தவம் போல மேற்கொள்பவர் இவர்.

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடம் ஆகியவற்றின் பழைய மாணவர். மாணவராக இருக்கும் போதே எழுத்துத் துறையிலும் ஆர்வம் ஏற்பட, **1976**ல் தினகரன் பத்திரிகையில் தனது முதலாவது சிறு கதையை எழுதினார். அன்றிலிருந்து இன்றுவரை **175** சிறுகதைகள், **5** குறு நாவல்கள், **50** கவிதைகள், பல மருத்துவ, விமர்சன, அறிவியல் கட்டுரைகள் இவரால் எழுதப்பட்டிருக்கின்றன. பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது இவர் எழுதிய "மீன் குஞ்சுகள்" சிறுகதை சென்னை இலக்கிய சிந்தனை பரிசு பெற்றது. தரமான சிறுகதை என இது தமிழகத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொண்டது. இச்சிறுகதை இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

இவரது படைப்புகள் இலங்கையில் வெளியான அநேக சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கின்றன. இவை தவிர தமிழகத்தின் தரமான இலக்கிய ஏடுகளான தாமரை, கணையாழி, தீபம் என்பன வற்றிலும் இவரது எழுத்துக்கள் களம் கண்டிருக்கின்றன. "மல்லிகையில் எழுத ஆரம்பித்த பின்னர் தான் நான் முதிர்ச்சி அடைந்தேன். தொடர்ந்து எழுத வாய்ப்புத் தந்து டொமினிக் ஜீவா என்னை வளர்த் தெடுத்தார்" என

மனம் திறந்து இவர் சொல்வதுண்டு. மல்லிகைப் பண்ணையில் வளர்ந்தவன் என்ற பெருமையும் இவருக்குண்டு.

பிரச்சினைகளும் துன்பங்களும் நிறைந்திருக்கும் நடைமுறை வாழ்வையே தனது படைப்புலகமாகக் கொண்டிருப்பவர் இவர். இவருடைய ஆரம்ப காலச் சிறுகதைகள் சமூகத்தில் எப்போதும் இருக்கக் கூடிய சாதியம், சீதனம், பெண்ணியம், வர்க்க முரண்பாடுகள், மனித மனங்களின் சிக்கலான உணர்வுப் போராட்டங்கள் என்பவற்றைக் கருப்பொருட்களாகக் கொண்டு எழுதப்பட்டவை. கால மாற்றத்தினால் போரும் அதன் அழிவுகளும் இந்த மண்ணில் முனைப்புப் பெற்ற போது அந்த அவலங்களே இவரது பிந்திய கதைகளின் கருப்பொருள்களாயின. அந்த அழிவுகளின் துயரங்களை இயல்பாக இவர் வெளிக்கொண்டு வந்ததற்கு, இவரும் அதே துன்பங்களுக்கு மத்தியிலேயே வாழ்வதையும் ஒரு காரணமாகக் கொள்ள முடிகிறது.

எல்லா வாசல்களும் மூடப்பட்ட நிலையில் மூச்சடங்கிப் போயிருந்த வன்னி மக்களின் துயரச் சுமைகளை வாழ்வுக்கான வலி மிகுந்த போராட்டங்களைத் தனது கதைகள் மூலம் வெளியுலகிற்குக் கொண்டுப் போய்ச் சேர்த்தவர் இவர். இந்த இடப் பெயர்வுக் காலத்தில் மிக அதிகளவு படைப்புக்களை எழுதியிருக்கும் படைப்பாளி என இவரைக் குறிப்பிட்டுச் சொல்லும் அதே சமயம் அந்த எழுத்துக்களில் கனதியும் தரமும் நிறைவாக உள்ளமையையும் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

ஒரு படைப்பாளியின் படைப்புக்கள் நூல் வடிவில் வரும்போதுதான் காலத்தின் பதிவுகளாய் ஆவணப்படுத்தபட்டு நிலைத்து நிற்க வாய்ப்புக் கிட்டுகின்றது. அந்த வகையில் இவரது 7 நூல்கள் இதுவரை வெளியாகியிருக்கின்றன. தரைமீன்கள், மீன் குஞ்சுகள், இது எங்கள் தேசம், இனி வானம் வசப்படும், ஒரு மணமகளைத் தேடி எனும் 5 சிறுகதைத் தொகுதிகளுடன் "நீ நடந்த பாதையிலே" எனும் கவிதைத் தொகுதியும், உற்சாகக் கட்டுரைகள் அடங்கிய "நாளை நமதே" என்ற நூலுமாக மொத்தம் 7 நூல்கள்.

சிறுகதைகள், கவிதைகளுக்காக 15 தடவைகள் இவர் பரிசு பெற்றிருக்கிறார். கடந்த வருடம் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான அரச சாஹித்திய விருது இவரது தரை மீன்களுக்கு கிடைத்திருக்கிறது.


ஒரு படைப்பாளி, ஒரு வைத்தியர் என்பதற்கும் அப்பால் ஒரு மனித நேயம் மிக்கவராய்ப் பல சமூக சேவைகள் மூலம் தன்னை அடையாளம் காட்டுபவர் இவர். கிளிநொச்சி தமிழ்ச் சங்கம், கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம், யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம், வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியனவற்றில் பொறுப்பான பதவிகளை வகித்தவர். வன்னேரிக் குளத்தில் இயங்கிய முதியோர் இல்லத்தில் இவர் வழங்கிய மனிதாபிமான சேவையை அங்குள்ள முதியவர்கள் மகிழ்வோடு குறிப்பிடுவதுண்டு. இந்த மனித நேயமே இவரை நல்லதொரு படைப்பாளியாக தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

"மானுட நேயத்துடன் தான் சார்ந்திருக்கும் சமூகத்தைப் பீடித்திருக்கும் பிணிகளுக்கு வைத்தியம் செய்வது மட்டுமல்லாமல் அச்சமூக வளர்ச்சியின் ஊட்டசக்தியாகத் திகழும் கருத்துக்களையும் வழங்கும் ஒரு வலுமிக்க பேனா இவருடையது"

என்று இவரது கதைகள் பற்றி மேமன்கவி குறிப்பிட்டிருப்பது முற்றிலும் சரியானது. இவருடைய பேனாவிலிருந்து உற்பத்தியாகும் நல்ல படைப்புகளை ஈழத்து இலக்கிய உலகம் உள்வாங்கக் காத்திருக்கிறது.

நன்றி மல்லிகை

---





மக்கள் பணியே மகேசன் பணி என மருத்துவப் பணிகளுடன் மனிதநேய பணிகளையும் மேற்கொண்ட இவர், அமரர் கந்தசாமி ஐயாவுடன் இணைந்து யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தினூடாக முதியோர் இல்லம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக்காகவும் மற்றும் சர்வதேச வலிந்துதவு நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோரின் உதவிகளுடன் அமைத்து பல முதியவர்களுக்குத் தஞ்சமளித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அகதிகளின் புனர்வாழ்வு தொடர்பான அமைப்புகளில் இணைந்து பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பணிகளுடன் தனது எழுத்துகளினூடாக போர்க்கால அவலங்களை வெளிக்கொணர்ந்த முக்கியமான படைப்பாளியாக இவர் திகழ்கிறார். சிறுகதையே இவரது பிரதானமான துறையாக இருந்தாலும் கவிதை, நாவல், விமர்சனம், மருத்துவம், அறிவியல் என பல்துறைகளிலே தனது வேலைப்பளுவுக்கு மத்தியிலும் எழுதிக் குவித்தவர் ச.முருகானந்தன். யாழ்ப்பாண பல்கலைக்கழக காலத்திலிருந்து இன்றுவரை அவரது பணிகளைக் கண்டு வியந்திருக்கிறேன். மாணவனாக இருந்த காலத்தில் எழுத ஆரம்பித்த காலத்தில் இருந்த அதே உற்சாகம் சற்றும் குறையாதவராக, இன்று வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் அயராது எழுதிவருவதுடன் மருத்துவப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றார். எந்த ஒரு சிக்கலான விடயத்தையும் இலகுவாக்கிச் சொல்லும் வல்லமை படைத்த எழுத்தாளரான ச.முருகானந்தன், அறிவியல், விஞ்ஞான, மருத்துவ எழுத்துத் துறைகளில் கால் பதித்திருப்பது அவரது சமூக அக்கறையை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. இவரது இரண்டாவது மருத்துவ நூலான "அம்மாவாகப் போகும் நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை" மூலம் நீங்கள் பயனுள்ள பல விடயங்களை அறிந்து உங்கள் ஆரோக்கியத்தைப் பேண முடியும்.

- டாக்டர். இந்துமதி சுந்தரலிங்கம்

# ச.முருகானந்தனின் "மீன்குஞ்சுகள்"




■ இ.சு.முரளிதரன்

ஈழத்தின் முக்கியமான சிறுகதை ஆசிரியர்களை உருவாக்கியதில் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரிக்கு தனித்துவமான பங்குண்டு. செ.கதிர்காமநாதன், தெணியான், ரஞ்சகுமார், கண.மகேஸ்வரன், ச.முருகானந்தன், இராஜேஸ்கண்ணன், இ.சு.முரளிதரன், தயாரூபன், தர்மதேவன், சீனா.உதயகுமார், இராகவன் போன்ற பலர் விக்னேஸ்வராக் கல்லூரி என்ற இலக்கியப்பாசறையில் பயின்று சிறுகதை உலகிலே தமக்கெனத் தனித்துவமான இடத்தினைப் பெற்றவர்கள். இவர்களில் செ.கதிர்காமநாதன், தெணியான், ரஞ்சகுமார், இராஜேஸ்கண்ணன், ச.முருகானந்தன் ஆகிய ஐவரும் மிக முக்கியமான ஆளுமையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவரான ச.முருகானந்தன் இளவயதிலேயே வாசிப்புத்துறையிலும், இலக்கியத்துறையிலும் அதிக ஈடுபாட்டோடு அமைந்திருந்தார். இவரது "கண்களின் வார்த்தைகள் தெரியாதே" என்ற முதற்படைப்பானது தினகரன் பத்திரிகையில் வெளியானது. ஈழத்து சஞ்சிகைகளில், தமிழக சஞ்சிகைகளிலும் தனது ஆக்கங்களை எழுதியுள்ளார். ச.முருகானந்தன் என்ற பெயரிலும் பிரகவாத ஆனந்த, வன்னேரி ஐயர், வன்னியன், தமிழ்ப்பித்தன், கருணை முருகு, கந்த மகிழ்னன் போன்ற புனை பெயர்களிலும் படைப்புகளை உருவாக்கியுள்ளார். மீன்குஞ்சுகள், தரை மீன்கள், இது எங்கள் தேசம், இனி வானம் வசப்படும், ஒரு மணமகனைத்தேடி, நாம் பிறந்த மண், கோடை மழை ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

"மீன்குஞ்சுகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு மல்லிகைப்பந்தல் வெளியீடாக 1994இல் வெளிவந்துள்ளது. தமிழகப் பதிப்பாக வெளியான இந்நூலுக்கான அட்டைப்படத்தினை ஓவியர் ரமணி வரைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மீன்குஞ்சுகள் சிறுகதைத் தொகுப்பிலே தாயும் சேயும் யாருக்குச் சொந்தம், அறத்தின்குரல், மீன்குஞ்சுகள், அந்த நிழல்கள் இந்த நிஜங்கள், பாதை மாறிய பந்தங்கள், தந்திரம், ஒரு கிராமத்தின் கதை, தீர்வு, புதுயுகப்பிரவேசம், எங்கே தான் வாழ்ந்தாலும், புதிய பரிணாமங்கள் என்றவாறாக பன்னிரண்டு கதைகள் உள்ளன. அநீதியின்வெற்றி, சாதியம், இனப்பிரச்சினை, வறுமை ஆகிய விடயங்களை இக்கதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இச்சிறுகதைகள் வெளியான காலத்தினையும் கருத்திலே கொள்ள வேண்டும். "யாருக்குச் சொந்தம்" போன்ற சில கதைகள் நீதிக்கதை போல எழுதப்பட்டுள்ளமை அவதானத்திற்குரியது. அக்கால கதை சொல் முறைமையின் தாக்கமாக இருக்கலாம். எனவே சமகாலக் கதைகளோடு இவற்றினை ஒப்பிட்டு நோக்குதல் ஏற்புடையதல்ல.

### (அ) அநீதியின் வெற்றி

யாருக்குச்சொந்தம், மீன்குஞ்சுகள், தந்திரம், தீர்வு எனும் நான்கு கதைகளும் அதிகாரம் வாகை கூடுவதை இனங்காட்டுகின்றன. நீதி தோல்வியடைகின்ற தருணத்தை உணர்த்துகின்றன. வாழ்க்கையிலே கஷ்டப்பட்டு முன்னேறிய ஆறுமுகம், பெருவிருப்போடு வீடொன்றைக் கட்டுகின்றார். தொழில் இட மாற்றத்தால் கொழும்பு செல்லும் போது, சுப்பிரமணியம் என்பவரும் வாடகைக்கு வழங்குகின்றார். மீண்டும் வந்து வீட்டைக் கேட்கும் போது சுப்பிரமணியம் கொடுக்க மறுக்க நீதி மன்றத்தை நாடுகின்றார். ஆறுமுகத்தின் வழக்கறிஞர் புதிய வீடு கட்டிக் குடியேற, ஆறுமுகம் கடனாளியாவதாகக் கூறிக் கதையை முடிக்கிறார். நீதிமன்றப் படிகளில் ஏறியோர் உருப்படுவதில்லை என்ற நீதியோடு கதை நிறைவு பெறுகின்றது.

சமூகத்தின் மேலாண்மை மையத்தில் இருப்போர் உழைப்பாளிகளைச் சுரண்டி வாழ்கின்றார்கள். உழைப்பாளியாக இருப்பவர் ஒருவர் முதலாளி என்ற நிலையை அடைந்து விட்டால், அவரும் அதிகாரத்தை கையிலெடுத்துப் பாட்டாளிகளுக்கு எதிராகவே செயற்படுவார் என்ற கருத்தியலை "மீன்குஞ்சுகள்" கதை வெளிப்படுத்துகின்றது. மார்க்கண்டு, சீனித்தம்பி என்போரின் நண்பனான வீரச்செல்வன் என்பவன் முதலாளியின் மகளைத் திருமணம் செய்து முதலாளித்துவ சிந்தனையோடு நடப்பதைக் கதை இனங்காட்டுகின்றது. உழைப்பவனுக்கு உழைப்பிலே பங்கு கிடைக்கா சமூக அநீதிகளைச் சுட்டிக் காட்டுகின்றது. சகோதரங்களுக்கிடையே வழக்கினை ஏற்படுத்தி, வழக்காட வைத்து, அவர்களுக்கான நீதி என்ற வழக்குச் செலவினைக் கடனாகக் கொடுத்து, இறுதியில் அவர்களின் காணியைத் தனதாக்கும் "தந்திரத்தை" "தந்திரம்" என்ற கதை வெளிப்படுத்துகின்றது. ஏழைக்கமக்காரனின் வயலுக்கான நீரை, அதிகாரம் கொண்ட ஒருவன் தனதாக்கிக் கொள்வதை "தீர்வு" சிறுகதை இனங்காட்டுகின்றது. ஒடுங்கிப் போவதால் எதுவும் நிகழப்போவதில்லை. எதிர்த்துப் போராடுவதே சிறந்தது எனக் கதை முடிவுறுகிறது.

(ஆ) சாதியம்

ஒருவர் தனது மத அடையாளத்தைப் புறந்தள்ளி இன்னொரு மதத்தவராக மாறிவிடமுடியும். தேசத்தின் அடையாளத்தைப் புறந்தள்ளி பிறிதொரு தேசத்தவராக மாறிவிடலாம். பால் அடையாளத்தைக் கூட மாற்றிக் கொள்ளலாம். ஆனால் சாதி என்ற அடையாளத்தை மாற்றிக் கொள்வது எளிதானதன்று. "இப்போதெல்லாம் யார் சாதி பார்க்கிறார்கள்?" என்று சொல்லி முடித்துவிட்டு அன்றைய செய்திகளை உற்றுக் கவனித்தால் சாதி என்ற அரக்கனின் கொடூரத்தை உணர்ந்து கொள்ள முடியும். தனது கால சமூகத்தில் சாதிய சிந்தனை எவ்வாறாக இருந்துள்ளது என்பதை கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அறத்தின் குரல், புதுயுகப் பிரவேசம், புதிய பரிணாமங்கள் எனும் மூன்று கதைகளும் சாதியம் சார்ந்த மையப்புள்ளியில் நிலை கொண்டுள்ளன. கம்பளை மருத்துவமனையிலே பணி புரிகின்ற மருத்துவ நண்பர்கள் இருவர், விடுமுறையின் போது ஊருக்குச் செல்வதாகவும், ஒருவரது இல்லத்திற்கு மற்றொருவர் சென்று உறவாடுவதாகவும் தீர்மானிக்கின்றனர். சலவைத் தொழில் சார்ந்த அடையாளத்தைக் கொண்ட நண்பனோ, தனது அடையாளத்தை பகிரங்கப்படுத்த முடியாமல் திணறுவதும், தந்தையின் உபதேசத்தின் பின்னர் எதிர்கொள்ளத் தைரியம் பெறுவதையும் "அறத்தின் குரல்" கதை வெளிப்படுத்துகின்றது. சாதி கடந்த திருமண உறவினை ஏனைய இரு கதைகளும் முதன்மைப்படுத்துகின்றன. வெள்ளைக் காரருடனும் தன்மைப் படுத்துகின்றன. வெள்ளைக்காரருடனும் சிங்களவரோடும் திருமணம் செய்வதை இயல்போடு ஏற்கும் சமூகம் சாதி பார்க்கும் பண்பை "புதுயுகப்பிரவேசம்" உணர்த்துகிறது. சாதி கடந்த திருமண உறவிற்குப் புலம்பெயர் வாழ்வு பின்புலமாவதைப் "புதிய பரிணாமங்கள்" கதை உணர்த்துகிறது.

(இ) இனப்பிரச்சினை

ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பித்த பிறகு பெரும்பான்மைப் படைப்புகள் இன முறுகலை பன்முகக் கோணங்களில் வெளிப்படுத்த முயன்றன. அந்த வகையில் ஒரு கிராமத்தின் கதை, எங்கே தான் வாழ்ந்தாலும் எனும் இருகதைகளும் இனவிடுதலை சார்ந்து பேசுகின்றன. சொந்த நிலத்தில் நிகழ்கின்ற சிங்களக் குடியேற்றத்தை பிறிதொரு வகையிலே "ஒருகிராமத்தின் கதை" வெளிப்படுத்துகின்றது. உள்ளூர் மக்களுக்காகக் கட்டப்படும் வீடுகளில் தெற்கிலிருந்து வரும் மீனவர்கள் அடாவடியாகக் குடியேறுவதையும், அவர்களை குடியெழுப்ப அரசு அதிகாரிகள் முனையாத தன்மையினையும் கதை வலியுறுத்துகின்றது. ஏழை விவசாயி கொல்லப்பட ஊடகமானது பயங்கரவாத முத்திரை குத்துவதை "எங்கே தான் வாழ்ந்தாலும்" கதை உணர்த்துகின்றது.

(ஈ) வறுமை


தாயும் சேயும், அந்த நிழல்கள் இந்த நிஜங்கள், பாதைமாறி பந்தங்கள் என்பன வறுமை சூழலின் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்றன. பத்துவயதுச் சிறுவன் ஒருவனை தாய் அடித்துவிட்டு கலங்குகின்ற பாசப் பிணைப்பினை "தாயும் சேயும்" கதை இனங்காட்டுகின்றது. வறுமைப்பட்ட தாயானவள் விற்பனைக்காக வடை, மோதகம் என்பவற்றைத் தயாரிக்கின்றாள். சிறுவனோ ஆசையில் எடுத்துச் சாப்பிடுகின்றான். அதற்காக அடிக்க வேண்டிய வறுமைச்சூழலில் வாழ்கின்ற தாயை அக்கதை இனங்காட்டுகின்றது. உறவுகளிடையே ஏற்பட்ட விரிசலை எண்ணெய்விற்கும் ஆச்சியின் கோணத்திலே "பாதை மாறிய பந்தங்கள்" கதையிலே காணமுடிகின்றது. உறவினரிடையே திருமண ஒப்பந்தம் நிகழ பகையும், பணமும் தடையாக அமைகின்றன. எனினும் அடுத்த தலைமுறையோ பெற்றோரின் சம்மதத்தைப் புறந்தள்ளிப் பதிவுத் திருமணத்தை முன்னெடுக்கின்றது. நீர்ப்பாசன திணைக்களத்திலிருந்து வேலை நிறுத்தம் காரணமாக உத்தியோகத்தை இழந்த எழுத்தாளனின் வறுமை நிலையினையும் காதல் உணர்வினையும் "அந்த நிழல்கள் இந்த நிஜங்கள்" வெளிப்படுத்துகின்றது. களவியலுக்கும் திருமண வாழ்விற்குமான வேறுபாட்டினைக் கதையிலே உணர்த்துகின்றார்.

ச.முருகானந்தனின் கதைகளின் முகிழ்நிலையானது மரபான வருணனையோடு அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கதை சொல் முறைமையில் மாறு பட்ட தருணங்களையும் இனங்காண முடிகின்றது. மொழியினையும் காத்திரமாகவே கையாண்டுள்ளார். ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, "மீன்குஞ்சுகள்" தொகுப்பானது கனதியானதாக அமைந்துள்ளது.

# ச.முருகானந்தனின் கவிதை முகம் “துளிர்த்தெழும் புதுச் செடிகள்” குறித்த ஒரு பார்வை

■ புலோலியூர் வேல் நந்தகுமார்




ஈழத்துப் படைப்பிலக்கியப் பரப்பானது காலத்துக்கு காலம் பல வைத்தியப் படைப்பாளி களையும் பிரசவித்த வண்ணமே உள்ளது. இவ் வகையில் அன்று புலோலியூர் சதாசிவம் நந்தி எனத் தொடங்கி இன்று ஞானசேகரன், எம்.கே.முருகானந்தன் எனத் தொடரும் வரிசையில் ஒருவராகவே பல்துறை ஆற்றல் மிக்க படைப்பாளியாக விளங்கும் டாக்டர் ச.முரு கானந்தன் அவர்களையும் தரிசிக்க முடிகிறது. அதிகம் சிறுகதை வழியாகவே இவர் அறியப்பட்டாலும் அவ்வப்போது தன் கவிதை முக தரிசனத்தையும் இவர் காட்டத் தவறவில்லை. அந்த வகையில் “நீ நடந்த பாதை யிலே” என்பது இவரது முதலாவது கவிதைத் தொகுதியாகும் துளிர்த்தெழும் புதுச் செடிகள் என்ற இந்தத் தொகுதி இவரது இரண்டாவது கவிதைத் தொகுதியாகும். இதில் இவரது கவி வளர்ச்சியை தரிசிக்க முடிகின்றது. ஈழத்தமிழரின் அவல வாழ்வு உட்பட பல பாடுபொருள்களில் அமைந்த இக் கவிதைத் தொகுப்பில் அழகான இலகு நடையில் அமைந்த கவித்துவம் மிக்க பல கவிதைகளைத் தரிசிக்க முடிகிறது. இவரது மனைவியும் சந்திரகாந்தா முருகானந்தன் என்ற பெயரில் ஈழத்து எழுத்துலகில் இயங்கிக் கொண்டிருக் கிறார். படைப்பிலக்கியங்களை விட இவரது மருத்துவத்துறைசார் கட்டுரைகளும் பயன் மிக்கனவாய் விளங்குகின்றன. இவர் கரணவாய் கிழக்கு கர வெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். கரணவாய் மண் பல ஆற்றல் வாய்ந்த படைப்பாளிகளைத் தந்த மண் கருணையோகன் எனும் பேராசிரியர் செ.யோகராசா, கருணைரவி, இ.சு.முரளிதரன் எனப் பலரைக் குறிப்பிடலாம்.

இவரது கவிதை முகதரிசனமாய் இரண்டாவது கவிதைத் தொகுதியாய் மணிமேகலைப் பிரசுரமாய் வெளிவந்ததே துளிர்த்தெழும் புதுச்செடிகள் என்ற கவிதைத் தொகுப்பாகும். இதற்கான முன்னுரையை கருணையூரான் என்ற பெயரில் பேராசிரியர் செ.யோக ராசா அவர்கள் வழங்கியுள்ளார். அவர் தம் உரையில் ஈழத்து தமிழரின் போர் அவலத்தை பாடும் கவிதை மரபின் தொடர்ச்சியை இவரது இக் கவிதைத் தொகுப்பிலும் தரிசிக்க முடிவதுடன் இக் கவிதைகள் ஒரு மௌனச் சாட்சிபோல் தமிழர் அனுபவித்து வரும் அவலங்களை உணர்ச்சி பூர்வமாக உள்ளத்தை தொட்டுச் செல்கிறது என்கிறார். அத்துடன் யுத்த அவலத்துக்கு அப்பால் மனித உறவுகளை சிறுபராய நினைவு மீட்டல் களை; பெண்ணியத்தை தொழிலாளர் அவலங்களை, காதலை எனப் பல்வேறுபட்ட விடயக் கருக்களையும் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார். என்னுரையாக நூலாசிரியர் அவர்கள் கவிதை எனக்கு இளைய புத்திரி ஆயினும் அவள் எனது செல்லமகள் கவிதை படைப்பதில் நிறைந்த திருப்தியையும் ஆத்ம சுகத்தையும் உணர்கிறேன் என்கிறார். இவரது கவிதைகள் தினக்குரல், சுடரொளி, வீரகேசரி, ஈழநாடு, போன்ற பத்திரிகைகளிலும் வெளிச்சம், கணையாழி, மல்லிகை, ஞானம், தாயகம், படிகள், தீபம் போன்ற சஞ்சிகைகளிலும் வெளி வந்துள்ளன. கவிதைக்கான பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். இனி தொகுதிக்குள் நுழைந்தால் எல்லா மாக 57 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. “துளிர்தெழும் புதுச் செடிகள்” என்ற முதற் கவிதையில் ரத்த ஆறு ஓடிய யுத்த அவலத்தை பேசும் போது

“எந்நேரமும் பயம் காட்டும்
“சாவு வாழ்ந்த காலத்தில்
உயிர்கள் இருப்பிழந்து போயின
சாவு எப்போதும் யாரையாவது
வாரிக் கொண்டு போனபடியே
இருக்கிறது. தன் பாட்டில்...”

என்கிறார். இணைந்த கரங்களால் என்ற கவிதையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அவலம் தன்னை.

“மலை என்ன செய்யும்
மனித மனங்கள் சில கல்லாயிருக்கையில்
ஊருக்கெல்லாம் ஊதிய உயர்வு

ஊதிய ஏற்றம் எம்பீ மந்திரிகளுக்கு
உனக்கு மட்டும் ஏனில்லை
உன் வயிறு வெறும் டப்பாவா”

எனப் பேசுகிறார்.

“காற்றில் சிக்கிச் சுழலும்
உதிரியை போல்
சம்பந்தப்பட்டவர்களும்
சம்பந்தப் படாதவர்களும்
உருக்குலைந்து போகிறார்கள்
அழிவுகளால்”

என யுத்த அழிவுகளை பேசுகிறார்.

“உப்புப் பூத்த
உன் உடல்வியர்வை நெடியை
மேலாக தாபம் தீப்பதற்காய்
நேற்றிரவு சுவைத்திருந்தென்
ஒரே ஒரு ரவையால்
நீ இல்லாது போய்விட்டாய்
இன்று அதிகான….”

என மற்றொரு கவிதையில் பதிவு செய்கிறார் இத்தகைய ஒரு கவிமொழியை படைக்க யுத்த அவலம் சுமந்த ஈழக்கவிஞனால் தான் முடியும் என்பது திண்ணம்

இனிமையற்ற இல்லறம் என்ற கவிதையில்

“உன் ஆதிக்க வெறியை விடுத்து
பெண் போகப் பொருளென்ற
சிந்தனையை விட்டகன்று
மனிதப் பிறவியாய் எனை ஏற்கும் வரை
இல்லற வாழ்வு இனிக்கப் போவதில்லை”

என்று கூறி எம்மை சிந்திக்க வைக்கிறார். விண்ணில் இருந்து மண்ணுக்கு என்ற கவிதையில் சுதந்திரமாய் பட்டம் ஏற்றும் உரிமைகூட மறுக்கப் பட்ட ஏழைச் சிறுவர்களின் அவல வாழ்வை வித்தியாச மான எடுத்துரைப்பில் கூறியுள்ளமை சிறப்புக்குரியது, வட புலத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட முஸ்லீம் களின் அவலத்தை காத்திருக்கிறோம் என்ற கவிதை மூலம் வெளிப்படுத்தியுள்ளார். யார் துயரப்பட்டாலும் துயரம் துயர்ந்தான் என்ற அவரது சமநிலைப் பார்வையை இக் கவிதைவழி எம்மால் தரிசிக்க முடி கிறது. சிதம்பர ரகசியம் என்ற கவிதை தாய் தந்தையர் இடையிலான சண்டைகள் பின்னர் அவர்கள் தாம்பத்திய உறவால் அதை மறந்து பழகினாலும் அதனால் பாழ்படும் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் பேசுகிறார். அண்ணன் தம்பி என்ற கவிதை இலங்கை யின் சிங்களவர், தமிழர் என்ற குறியீட்டுப் பிண்ணணி யில் அமைந்து யுத்த அவலத்தை எப்போதும் தம்பியையே பிழை சொல்லும் அண்ணனுக்கு சார்பான உலகின் போக்கை சாடுவதாக அமைகிறது. இதே போல எரி நட்சத்திரத்தை உதிர்த்து விட்டு என்ற கவிதை திருமண பந்தம் என்ற பெயரால் அடிமைப்படுத்தப் படும் பெண்ணின் அவலங்களை அந்தப் பெண்ணே கூறும் தொனியில் பேசுகிறது.

நீயென்னைப் பொத்திப் பொத்தி



வைத்திருப்பது
என் மீதான அன்பினாலல்ல
ஆக்கிரிப்பாலென்பதை உணர்ந்து கொள்ள
எனக்கு யுகங்கள் தேவைப்படவில்லை…

என்ற வரிகள் முமக்கியமானவை.


“சுமைகளின் அழுத்தத்தில்” “இழப்பும் அமைப்பும்” வாலிபக்கனவு அடரிலை உதிரிலை, காத லெனும் பெருவெளியில் போன்ற கவிதைகள் காதல்சார் உணர்வுகளின் வெவ்வேறு பரிானங்களை பேசும் கவிதைகளாக அமைந்துள்ளன. இதேபோல நாம் சுமந்த யுத்த அவலத்தின் வெவ்வேறு பரிமாணங்களைப் பேசும் கவிதைகளாக “சொர்க்கவாசலும் இறந்தெழுதலும்”, “எய்தவன் அம்பு அல்லது பூனைக்கு மணி”, “இருள் சூழந்த பூமி”, “சேதி சொல்லும் செற்றிறம்”, “உயிராயுதங் கள்”, “கொட்டும் மழையும் அசதி முகாமும்”, “சாவுக்குள் நிரும் வாழ்வு”, “சிதறும் கனவுக்குமிழ்கள்”,போன்ற கவிதைகளைக் குறிப்பிடலாம். இதேபோல கடல் கொண்ட பூமி போன்ற கவிதை சுனாமி அனர்த்த அவலத்தை பேசுகிறது. இதே போல பெண் எனு் பெரு விளக்கே, புதுமைப் பெண்கள் போன்ற கவிதைகள் பெண் விடுதலைச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு யுத்த அவல வாழ்வின் சாட்சியாய் அதிக கவிதை கள் கொண்டு விரிகிறது இத்தொகுப்பு. இறுதியில்

“கவிதை வரிகளின் உள்ளடுக்குகளிலும்
அசுரர்கள் வந்து
கட்டியிழுத்துக் கொண்டு போய்
நிராயுத பாணிகளைத்
துவம்சம் செய்கிறார்கள்…
எழுதி முடித்ததும் கண்களை
இறுக மூடி சயனித்து உறங்கிட
யுகங்கள் கடக்கிறது”

எனவும் மன உணர்வுகள் வெளிப்படுத்த பயந்த தடைக்காலத்தையும் பதிவு செய்துள்ளார். பன்முக ஆளுமை கொண்டு இன்றும் ஈழத்து இலக்கிய உலகில் தம்பதிகளாய் இயங்கும் இவர்களது படைப்புப் பயணத்து தலை வணங்கி இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

# ச.முருகானந்தனின் "நீ நடந்த பாதையில்..."

மேகலா ரஞ்சித்




பேரினவாத யுத்த அரக்கன் இலங்கை மக்களை குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்களைக் கடந்த கால் நூற்றாண்டுகளாக நரகத்தில் தள்ளி எத்தனையோ கொடுமைகளையும், அக்கிரமங்களையும் அவர்கள் மீது திணித்துள்ளது. அந்த அதிர்ச்சிப் பயங்கரத்திலிருந்து இன்னும் மக்கள் மீளவில்லை. அத்துடன் யுத்த மேகங்கள் இன்னும் முற்றாகக் கலைந்து விடவுமில்லை.

இக்காலகட்டத்தின் சொல்லில் அடங்கா அவலங்களுக்கு மத்தியில், தமிழ் இலக்கியப் பரப்பில் பல நல்ல படைப்புகளும், படைப்பாளிகளும் உருவாகி யுள்ளனர். அவர்களில் சிறுகதையில் முத்திரை பதித்து சாகித்திய விருதினையும் பெற்றுக் கொண்ட படைப் பாளியான டாக்டர். ச.முருகானந்தன், புதிய ஒரு கவிஞராக இப்போது உருவெடுத்துள்ளார்.

இவர் போர்ப்பிரதேசத்தில் கடந்த கால் நூற்றாண்டு பணியாற்றிவரும் அனுபவத்தினூடே போரினால் உறவுகளையும், உடைமைகளையும், உறையுளையும் இழந்ததுடன், போரின் கோரமுகத்தின் இன்னல்களில் சிக்குண்டு கெடுபிடிகளுக்குள்ளான ஒரு மனிதநேயம் மிக்க படைப்பாளி.

அற்புதப் படைப்பாற்றல் வாய்ந்த கவிஞர் களுக்கு அரும் பெரும் சொத்தாக வாய்த்தது அவர்களது கவியுள்ளம் தானென்று கூறவேண்டும். ஒவ்வொரு கவிஞனுக்கும் இயல்பாக அமைந்திருக்கும் கவிதை உள்ளத்தின் அழகு "ஒன்றிப்போதல்" அல்லது "அது வாதல்" எனலாம். ஒரு கவிஞனின் ஒன்றித்தல் நிலையில் தான் சிறந்த கவிதைகள் பிரசவிக்கப்படுகிறது என்பதாக ச.முருகானந்தனின் சில போர்க்கால கவிதைகள் அமைந்திருக்கின்றன.

போர்க்காலக் கவிதைகளை - தாயகக் கோட் பாட்டை ஆதரிக்கும் ஒருவராக நின்று கவிதை படைத் துள்ள கவிஞர் தன்னை- காற்றும், கடலும், வானும், நிலவும், மரமும், மலையும், ஆறும், பூவும், பெண்ணும், காதலும், ஈர்க்கவில்லை என்று கூறினாலும், இவர் எல்லாவற்றினாலும் ஈர்க்கப்பட்டே கவிதை படைத் துள்ளமையைக் காணமுடிகிறது. தாயகக் கோட்பாடு, யுத்த அவலம், சமாதானம் பற்றிய பார்வை, பெண் விடுதலை, காதல், உழைப்பு, வறுமை, இயற்கை, சுனாமி என பலவற்றையும் பற்றி கவிதை புனைந்துள்ளார்.

கொடுமைகளை எரியூட்ட வேண்டும் என்று நாச யுத்தத்திற்கு எதிரானதும் அதே சமயம் தாயக விடுதலைப் போரை ஆதரிப்பதாகவும், மாறுபட்ட நிலைகள் கொண்ட கவிதைகள் கவிஞரின் நிலையை மட்டுமல்ல இன்றைய மக்களின் குழம்பிப் போன மனநிலையையும் பிரதிபலிப்பதாக உள்ளன.

அவரது கவிதை வரிகளிலேயே அவரது கவிதை பற்றிக் குறிப்பிடுவதனால், "என் கவிதை வரிகளில் எதுகை யில்லை, மோனையில்லை ஆனாலும் இது கவிதை. பண்டிதர்களும், புலவர்களும் மன்னிப்பார்களாக," என்பதாகும்.

யுத்த அவலம் பற்றி ஒரு கவிதையில் குறிப்பிடும் போது இவ்வாறு கூறுகிறார். "புதைகுழிகள் தோண்ட வேண்டிய சிரமம் யாருக்குமில்லை. இங்கு புதைகுழிகளே மலக்குழிகளாகி..."

இன்னொரு கவிதையில்,
பிரபஞ்ச இடை வெளியின் இசைவில்
பிணம் தின்னிக் கழுகுகளைத் தாண்டி
தாய்மண்ணிற்கான பயணங்கள்

என செம்மணிப் பிரதேசத்தைத் தாண்டிப் போகும் போது ஏற்படும் அனுபவத்தைக் கூறும்போது எமது கண்ணிலும் நீர் சுரக்கிறது.

வாழ்ந்து கொண்டே சாகவும்
செத்துக் கொண்டே வாழவும்
எமக்குக் கற்றுத் தந்தது
நாச யுத்தம் தான்

என்று யுத்தத்தின் கோரமுகம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இறப்பைப்பற்றிக் கூறுகையில் கவிஞர், அதற்குக் காரணமான ஆக்கிரமிப்பை

உயிர்களைக் காவுகொள்ள
இயமதூதர் தேவையில்லை

தென்புலத்தர் இங்கேயே இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

கம்னியூசிய நாடுகள் எமது நாட்டு அரசுக்கு ஆயுதங்கள் வழங்குவதைக் கண்டிக்கும் அழகைப் பாருங்கள்.

சீனக் கழுகுகளும்
ரஷ்யப் பருந்துகளும்
தாலாட்டும் எம்
பச்சைக் குழந்தைகளையும்
இரையாக்குகின்றன.

அடுத்து தாயகக் கோட்பாட்டை ஆதரிக்கும் கவிதைகளில், விடுதலை வேட்கையோடு ஒன்றிப் போன இவரது கவி வரி

சிந்தியுங்களேன்
எங்கள் எரியுண்டு போன
தாயகம் பற்றி சிந்தியுங்களேன்.


இத் தேசத்தின் விடுதலைக்காக ஆயுதம் தூக்கியதை நியாயப்படுத்தும் வரிகளில் ஆயுதக் கலா சாரத்தை ஆதரிக்கிறாரா என்ற ஐயம் தோன்றுகிறது.

தொடரும் இன்னொரு யுத்தம் இங்கே விரிகிறது.

இங்கேயும் மாவீரம் மண்ணிற்காய்த்தான்.
விண்மீன்கள் முகட்டில் பூக்க
அது சூரிய வரவாய் விடிதலின் ஒளிர்ந்தது
தமிழ் மண்ணில் பிறந்த மாவீரமே!

சமாதானத்தில் அவநம்பிக்கை கொண்டதாகவே இவரது கவிதைகள் அமைந்துள்ளன. எனினும் சமாதானத்தை விரும்புகிறார். ஆயுதப்போர் தொடர வேண்டுமா, நிறுத்தப்பட வேண்டுமா என்ற குழப்ப நிலை மாறாதவராகவே கவிஞர் இருப்பது தெரிகிறது.

உதாரணமாக பின்வரும் கவிதைகள்
அமைதி தொடர வேண்டும்
அதற்கு ஆண்டவரும் ஆள்பவரும்
ஆசீர்வதிக்க வேண்டும்





இன்னொரு கவிதையில், பின்வருமாறு கூறுகிறார்.

மோதல் தவிர்ப்பு என்று பெயர்தான்
மோதல்கள் சத்தமின்றி அரங்கேறும்
ஈரக்கசிவில் புழுதி படிந்தது போல்

சமாதான முன்னெடுப்பைப் பற்றி குறிப்பிடும் போது, இவ்வாறு குறிப்பிடுகிறார்.

தேவாரம் பாடித் திறக்க
திருஞான சம்மந்தர்களாலும் முடியவில்லை
திறக்கும் கதவுகளை

ச.முருகானந்தன் என்ற சிறுகதை எழுத்தாளனுக்குள்ளே இப்படி ஓர் அற்புதமான கவிஞனும் இருப்பான் என்று நான் நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஒரு சில கவிதைகள் வெறும் சொல்லடுக்குகளாக இருந்த போதிலும், சில கவிதைகள் மனதை வருடி அல்லது நெருடிச் சென்று நீண்ட நேரம் சிந்தனையிலிருந்து விடுபட மறுக்கிறது.

கவிஞரின் இன்னொரு சிறப்பம்சமாக இலகு சொற்களைப் பிரயோகித்து புரியும் வண்ணம் எழுதப் பட்டமையையும் குறிப்பிடலாம். உயர் வாசிப்புக்கென்ற போர்வையில் புரியாத சொற் பிரயோகங்கள் இல்லாதிருப்பதால் எந்த மட்டத்தினரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம். படித்துப் பார்க்க வேண்டிய தொகுதி.

## தரைமீன்கள் தொகுப்புக்கான டொமினிக் ஜீவாவின் முன்னுரை

# செயல் இதுவே மகத்தான மாமந்திரம்!

டாக்டர் முருகானந்தன் நேசிக்கப்படத் தக்க தான பல நல்ல பண்புகளையும் நற்குணங்களையும் தன் னகத்தே கொண்டு மிளிப்பவர். அதனால் பலருடைய நல்ல நட்புக்கு உரியவராக இன்று திகழ்ந்து வருகின்றார்.

கடந்த கால வன்னி நிலத்தின் வாழ்வனு பவங்கள் இவரது தனிமனிதப் பண்புகளையும் வாழ் வனுபவத்தையும் செழுமைப்படுத்திச் சீர் செய்துள்ளன.

ஈழத்தில் - நமது மண்ணில் - அதிசயிக்கத் தக்கதான ஒரு செய்தி என்னவென்றால் பல மருத்துவ டாக்டர்கள் இலக்கியத்துறையில் - அதிலும் படைப்புத் துறையில் பேர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் தமது நாமத்தைப் பதிய வைத்துக் கொண்டிருப்பது தான்.

தொழில் ரீதியாகவும் நல் நடத்தை சம்பந்தமாக வும் பாமர மக்களின் மத்தியில் மிக முக்கிய செல்வாக் குப் பெற்றுத் திகழ்ந்து வரும் இந்த டாக்டர்கள் தமது தொடர் சிருஷ்டிகள் மூலம் இலக்கியச் சுவைஞர் களிடமும் தனிக் கௌரவமும் மதிப்பும் பெற்றுத் திகழ்ந்து வருகின்றனர்.

தமிழ்ச் சிருஷ்டித்துறையில் இது ஒரு புதுமை!

அப்படியாகப் பாமர மக்களின் வாழ்வு நிலையையும் அவர்களது நாளாந்தப் பிரச்சினை களையும் தமது சிருஷ்டிகளின் கருவூலமாகக் கொண்டு படைத்து வரும் மருத்துவ நிபுணர்களில் இவரும் ஒருவர்.

இவரது சிறுகதைகள் தொடர்ந்தும் நமது சஞ்சிகை, பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன.

யுத்தக் கொடு நாசத்தால் சீரழிந்து போய், நோயாலும், போதிய மருந்து வகைகள் இல்லாக் கொடுமையினாலும், வறுமையினாலும் நேரத்திற்குக் கஞ்சி குடித்தறியா வன்னிக் காட்டுப் பிரதேச மக்களுக்கு நாளாந்தம் தொடர்ந்து மருத்துவ சேவையாற்றி வருவது என்பது எழுத்தில் வடிக்க முடியாத அத்தனை துன்பியல் சோகமாகும்.

இந்த யதார்த்த நெருக்கடிச் சூழ்நிலைக்குத் தன்னைத் தினசரி ஒப்புக் கொடுத்த வண்ணம் தொடர்ந்து இலக்கிய சேவையாற்றிக் கொண்டு, இடை விடாமல் எழுதிக் கொண்டுமிருக்கிறார் இவர் என்றால் இவரது தன்னம்பிக்கையை என்னவென்று சொல்வது

கதைகள் சிருஷ்டிப்பது மாத்திரமல்ல, நல்ல பல கட்டுரைகளையும் தொடர்ந்து எழுதி வருகிறார்.

இவரது முதற் சிறுகதைத் தொகுதியான “மீன் குஞ்சுகள்” மல்லிகைப் பந்தலின் வெளியீடாக 1994 மேயில் வெளிவந்தது. 12 சிறுகதைளை உள்ளடக்கிய இந்தச் சிறுகதைத் தொகுதி வெளிவந்த அந்தக் கால கட்டத்திலேயே பலராலும் பேசப்பட்ட ஒரு தொகுதி யாகும். விமரிசகர்களால் விமரிசிக்கப்பட்ட அத் தொகுதி சென்னையில் அச்சிடப்பெற்ற தொகுதியாகும்.

“தரைமீன்கள்” என்ற இந்தச் சிறுகதைத் தொகுதியை மல்லிகைப் பந்தலின் வெளியீடாக வெளியிட்டு வைப்பதில் தனி மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தொகுதியில் இருபது கதைகள் இடம் பெற்றுள்ளன. இக்கதைகளில் பல, பல்வேறு கால கட்டங் களில் பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டவையாகும்.

ஈழத்து இலக்கிய உலகில் அதி வேகமாக எழுதிக் குவிக்கும் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். யுத்தக் கொடு நாச ரணப் பூக்களால் அலங்கரிப்புச் செய்யப் பட்டுள்ள வன்னி மாமண்ணில் ஓய்வு ஒழிச்சலில்லாமல் தனது தினசரிக் கடமையைத் தவறாமல் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்த கட்டாய கடமைக்கு உட்பட்டுச் சேவையாற்றி வரும் இவர், அந்த நாச அவலங்கள் நிகழ்ந்த கால கட்டங்களில் கூட, பாமர மக்களுக்குத்



தொண்டூழியக் கடமை செய்து வந்ததுடன், இடையறாது “அரிக்கன் லாம்பு” வெளிச்சத்தில் எழுதி வந்ததும் இவரது சிறப்பம்சங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவரது வாழ்வனுபவங்களே இவரது படைப்பு களாக எழுத்தில் மிளிர்கின்றன.

மக்களை நேசிக்கக் கற்றுக் கொண்ட எவனும், எங்குதான் வாழ்ந்து வந்தாலும், அவன் மக்கள் தொண்ட னாகவே நாளடைவில் கணிக்கப்படுவான் என்பது சர்வ நிச்சயம்.இவரது வாழ்க்கையிலிருந்தும் படைப்புக் களிலிருந்தும் துல்லியமாக இதை நாம் தெரிந்து கொள்ளலாம். யுத்த நெருக்கடிகள், அவலச் சாவுகள், புலம் பெயர்ந்து விட்ட மக்கள் பட்ட கஷ்ட நிஷ்டூரங்கள் துன்ப துயரங்கள் இவரையும் இவரது எழுத்துக்களையும் பண்படுத்திச் செழுமைப்படுத்தியுள்ளன என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தான் வேண்டும்.

*31.8.2003,* டொமினிக் ஜீவா

## ச. முருகானந்தன் பற்றி சிறுதகவல்கள்

*தந்தை : சண்முகம்*


*நிரந்தர முகவரி :*
*அன்பகம், கரணவாய் கிழக்கு, கரவெட்டி.*

*தற்காலிக முகவரி:*
*81, மணிங் இடம், கொழும்பு -06*

*தொலைபேசி இல:*
*0718174377*

*சாதனைகள் விபரம்:*


1. இலங்கையின் அரசின் சாகித்திய விருது (சிறுகதைக்காக)
2. வடமாகாண விருது : - மருத்துவ நூலுக்காக
3. இலங்கை இலக்கிய பேரவை விருது (சிறுகதைக்காக)
4. தகவம் விருது - இருதடவை.
5. சென்னை இலக்கிய சிந்தனை விருது.
6. கலைஞான வாரிதி விருது கரவெட்டி பிரதேச சபை
7. கலாபூஷணம் விருது - இலங்கை அரசு.
8. கிளிநொச்சி பிரதேச சபை உயர்கலை எழில் விருது (வாழ்நாள் சாதனை)
9. இலக்கியச் செல்வர் விருது தமிழ்ச்சங்கம்.
10. 30க்கு மேற்பட்ட சிறுகதைப் போட்டிகளில் பரிசு.
11. இருபது நூல்களின் ஆசிரியர் - (10 சிறுகதைத் தொகுதிகள், 4 மருத்துவ நூல்கள், 2 குறுநாவல் தொகுதிகள், 2 கவிதைத் தொகுதிகள், இளைஞருக்கான கட்டுரைத் தொகுதி)
12. தேசிய நாளேடுகளில் தொடர்ச்சியாக ஆறு வருடங்களாக மருத்துவ விழிப்புணர்வுக் கட்டுரைகளை செய்து வருகின்றார்.
13. தொலைக்காட்சியில் மருத்துவ விழிப்புணர்வு கலந்துரையாடல்கள்.
14. வட மாகாண பாடசாலை உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகள். போதை மற்றும் பாலியல் நோய்களுக்கு எதிராக
15. சினிமா மற்றும் நூல் விமர்சனங்கள்.
16. வாழ்நாள் சாதனைக்கான தேசிய விருது (கல்வி அமைச்சு)









உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்



திருமண அழைப்பிதழ்
காட்சியறை

MATHI
COLOURS

WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.
T.P: 021 2229285, 077 7222259

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.